# இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்



கலாநிதி. குமாரி ஜெயவர்த்தன

K. Kailasapathy
8/10/79

# இலங்கையில்
# இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்

ஆங்கில மூலம்
கலாநிதி குமாரி ஜெயவர்த்தன
தமிழாக்கம்: 'சண்'

வாசகர் சங்க வெளியீடு - 10

இலங்கையில்

# இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்

A Tamil Translation Of

THE ORIGINS OF THE LEFT MOVEMENT
IN SRI LANKA.

by:
Dr. KUMARI JAYAWARDENA.
University of Colombo, Sri Lanka,

Translated by: SAN
Cover design by: SERAN

**First Edition: October 1979**

**Published by: M. A. Nuhman
for Readers' Association,
Noori Manzil; Kalmunai - 6, Sri Lanka,**

**Printed at: Chitra Achchakam,
310, Clock Tower Road, Jaffna,**

Price Rs. 3-00

# இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்*

## தேசிய எழுச்சியும் தொழிலாளர் இயக்கமும்

இலங்கையில் தோட்ட முதலாளித்துவத்தின் வளர்ச்சி நாட்டின் வர்க்க அமைப்பிலும், அரசியல் மேற்கட்டுமானத்திலும் மிக முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. உற்பத்தி முறையில் ஏற்பட்ட இந்த மாறுதலின் பயனாக முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளி வர்க்கம் என்னும் இரு புதிய சமூக வகுப்புகள் உருவாகின. இவையிரண்டும் அரசியல் ஜனநாயக உரிமைக்காகப் போராடிய வகுப்புகளாகும். இவைதாம் தேசிய இயக்கத்துடன் இணைந்த அரசியல் சீர்திருத்தத்தையும், வேலைநிறுத்தம், தொழிலாளர் கிளர்ச்சி நடவடிக்கைகள், தொழிற்சங்கங்களை உருவாக்குதல் என்ற செயல் முறைகளை உள்ளடக்கிய தொழிலாளர் இயக்கத்தையும் தோற்றுவித்தன. 1935 ல் முதன் முதலாக ஒரு இடதுசாரிக்கட்சி உருவாகிய சூழ்நிலையை விளங்கிக்கொள்வதற்கு, முதலாளித்துவத்தின் வளர்ச்சி பற்றியும் தொழிலாளர் கிளர்ச்சியின் தோற்றம் பற்றியும் சுருக்கமாக வேனும் குறிப்பிடுதல் அவசியம்.

இலங்கை முதலாளித்துவம் பிரதானமாக தோட்டத்துறையிலும் அதுசார்ந்த பொருளாதார நடவடிக்கைகளைச் சார்ந்தும் அமைந்தது. கோப்பி பிரதான ஏற்றுமதிப் பயிராக இருந்த 1820 - 1880 காலப்பகுதியில் பிரிட்டிஷ் முதலாளிகளின் தனியார் உடமை முறையே தோட்டத்துறையில முக்கியம் பெற்றிருந்தது. 1880 காலப்பகுதிகளில் பிரிட்டனில் புதுமுறையான ஸ்தாபன முறைகள் தோன்றின. ஏகபோகங்களின் தோற்றம், மூலதனத்தின் ஏற்றுமதி, ஏகாதிபத்தியத்தின் உதயம் என்பனவே இம் மாற்றங்களாகும். 1886 இன் பின்னர் இலங்கையிலும் இம்மாறுதல்களின் விளைவுகளைக் காணக்கூடியதாய் இருந்தது. இங்கு தனியார் உடமைகளாக இருந்த தேயிலை, றப்பர் தோட்டங்கள் கம்பனி உடமையாயின. தோட்டத்துறை உற்பத்திகள் மூலம் நாட்டின் மூலவளங்களை அபகரிப்பதிலும், லாபத்தைத் திரட்டி வெளியே அனுப்புவதிலும், அதை தோட்டத்துறையில் மறுமுதலீடு செய்வதிலுமே ஏகாதிபத்தியம் கவனம் செலுத்தியது. இந்த முதலீடுகள் அபரிமிதமாக வளர்ந்தன. 1899-ல் 387,000 ஏக்கராக இருந்த தேயிலை உற்பத்தி 1934-ல் 555,000 ஏக்கராக 70% அதிகரிப்பைக் கண்டது. 20-ம் நூற்றுண்டின் தொடக்க

ஆண்டுகளில் புகுத்தப்பட்ட றப்பர் 1934-ல் 600,000 ஏக்கர் விஸ்தீரணத்தில் பயிரிடப்படும் அளவு அதிகரித்தது. நாட்டின் பொருளாதாரம் சமச்சீரற்றதாக - மூன்று ஏற்றுமதிப் பயிர்களின் வருமானத்தில் தங்கியிருக்கும் நிலைக்கு மாற்றமுற்றது.

தோட்டத்துறையில் முதலீடுகள் குவிக்கப்பட்டதன் உடன் விளைவாக நாட்டின் பொருளாதாரத்தின் ஏனைய துறைகள் புறக்கணிக்கப்பட்டன. தொழிற்துறைப்பொருட்களும் நுகர்வுப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. வரித்தடைகள் எதுவும் இல்லாமை பிரிட்டிஷ் தொழிற்பொருள் இறக்குமதிக்கு சாதகமானதாய் அமைந்ததோடு உள்ளூர் உற்பத்திக்குத்தடையாயிற்று. 1930க்களில் நாட்டில் உற்பத்தியான தொழிற்பொருட்கள் (புகையிலை, சோப், மெழுகுவர்த்தி, ஐஸ் குளிர்பானம் முதலியன) காலனித்துவ அமைப்பின் மாதிரிக்கு த் தகுந்த உதாரணமாக அமைந்தன. அத்தோடு இவற்றில் பெரும்பாலானவை பிரிட்டிஷாரின் உடமைகளாகவும் இருந்தன. வேறுவகைத் தொழில்கள் ஏதேனும் ஏற்பட்டனவெனின் அவையாவும் தோட்டத்துறைப் பொருளியலுடன் சம்பந்தப்பட்டவையாகவே அமைந்தன. இவற்றில் பெரும்பகுதி அரசாங்கத்துறைத் தொழில்களாகும். ரெயில்வே தொழிற்பட்டறைகள், பொதுவேலைப்பகுதியின் வேலைத்தலங்கள் இவற்றுள் அடங்கும். தோட்டத்துறை சார்ந்த இயந்திரங்கள் சம்பந்தப்பட்ட வேலைகள் தனியார்துறை எஞ்சினியரிங் தொழிலகங்களால் செய்யப்பட்டன. இந்தவகை வளர்ச்சியின் பிரதான அம்சம் உள்ளூர் தொழில் முயற்சியாளரும், வர்த்தகர்களும் அறவே ஒதுக்கப்பட்டமையே. மிகப்பெரிய நெசவு ஆலை இந்தியர் வசம் இருந்தது. 1930 க்களில் இலங்கையருக்கு சொந்தமாக இருந்தவையாக தீப்பெட்டி, பீடி, தளவாடம், பிரஷ்கள், தெங்குப் பொருட்களோடு சம்பந்தப்பட்ட சிறுதொழில்கள் ஆகியனவற்றை மட்டும் குறிப்பிடலாம். வர்த்தகத்துறையிலும் இதே நிலைமை தான். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் பிரிட்டிஷ், இந்திய முதலாளிகளின் ஆதிக்கத்துள் இருந்தது. உள்ளூர் வர்த்தகம் கூட வெளிநாட்டவர் கையிலேயே பெருமளவு இருந்தது. உதாரணமாக 1944-ல் 90% மான மொத்த வியாபாரிகளும், 60% மான இடைத்தர வர்த்தகர்களும், 40% மான சில்லறை வியாபாரிகளும் இந்தியர்களாக இருந்தனர். இலங்கை முதலாளித்துவ வகுப்பின் பொருளாதார அடித்தளமாக தோட்டத் தொழில், சுரங்கத் தொழில் (ரப்பர், தென்னை, கறுவா, மரம், காரீயம், சாராயக் குத்தகை), சிறுவர்த்தகம்,) வாடகை, ஒப்பந்த வேலைகள் அரசாங்கத்தொழில், (சட்டம், வைத்தியம்) முதலிய தொழிற்

துறைகள் என்பன விளங்கின. இந்த முதலாளித்துவ வகுப்பு ஏகாதிபத்தியத்திடம் இருந்து சலுகைகளை கேட்க ஆரம்பித்த பொழுதே தேசிய வாதத்தின் தொடக்கத்தை நாம் காண்கிறோம்.[1]

1820 க்களில் தோட்டத்தொழில் மூலம் முதலாளித்துவம் இந்நாட்டில் புகுத்தப்பட்டபொழுது, தென் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்தியர்கள் அடிமைகளாகவே நடத்தப்பட பட்டனர். இந்த கூலி உழைப்பாளர் தொகுதியின் மத்தியில் தனித்துவமான நடவடிக்கையும் ஸ்தாபன அமைப்பும் உருவாக முடியாது போயிற்று. எனினும் போக்குவரத்தினதும், நகரம் சார்ந்த தொழில்களினதும் வளர்ச்சி நகரங்களில் தொழில்திறன் மிகுந்தவர்களையும், அல்லாதவர்களையும் உள்ளடக்கிய தொழிலாளர் வகுப்பொன்று உருவாகக் காரணமாயிற்று. மரபுரீதியான கிராமமட்டத்திலான உற்பத்தி சாதனங்களில் இருந்து பிரிக்கப்பட்ட இத்தொழிலாளர் வகுப்பு புதுவகையான முதலாளி, தொழிலாளி உறவுமுறைக்கு ஆளானது. 'சுதந்திரமானவர்களாய்' தமது உழைப்பைச் சந்தையில் விற்று வாழும் இவ்வகுப்பின் ஒரு பகுதியினர் தமது வாழ்நிலையை ஸ்தாபன அமைப்பின் மூலமும் கூட்டு நடவடிக்கையாலும் உயர்த்திக்கொள்ள முயன்றனர். 1880-1930க்கு இடைப்பட்டதான 50வருட காலத்தில் தொழிலாளரின் தொழிற்சங்க உரிமைக்கான கிளர்ச்சி முதலாளித்துவ வகுப்பினுல் நடத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த இயக்கத்துடன் தொடர்பு பட்டதாய் இருந்தது.

முதலாளிகளதும், நகரத்தொழிலாளர்களதும் ஜனநாயக உரிமைப் போராட்டத்தை பல கட்டங்களாகப் பிரிக்கலாம். 1880-1920 க்கு இடைப்பட்ட முதற்கட்டம் சமய மறுமலர்ச்சியும், தேசிய வாதமும் தோன்றிய காலமாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம் 1880 க்களில் சிங்கள-தமிழ் புத்திஜீவிகளால் பௌத்த, இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ற உருவில் மறைமுகமாக வெளிப்பட்டது. விதேச ஆட்சியாளர்க்கும் மிஷனரிமார்களுக்கும் எதிராக சுதேச மதங்கள் தமது பண்பாட்டை நிலைநிறுத்த முயலுதல் தேசிய வாதத்தின் ஆரம்ப வடிவமே. லெனின் சுட்டிக்காட்டியுள்ளதுபோல் 'சமயப் போர்வையில் அரசியல் எதிர்ப்பை வெளியிடுதல் எல்லாத் தேசிய இனங்களினதும் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் அவதானிக்கக்கூடிய பொதுப்பண்பு' ஆகும். இலங்கையில் 1893-ல், கேவ் அன்ட் கம்பனியின் அச்சுத்தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்பின் முதலாவது தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதை

ஆரம்பித்தவர்கள் ஏ. இ. புல்ட்ஜென்ஸ் என்னும் பௌத்த மறைஞானியும் (theosophist) பல்வேறு வகைப்பட்ட எதிர்ப்பு இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்த மத்தியதர வர்க்க சீர்திருத்தவாதிகளுமே என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது. 1920 வரை பல வேலைநிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் சில ஸ்தாபன ரீதியான வேலை நிறுத்தங்களாக இருந்தன. சலவைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் (1896) வண்டிக்காரர் வேலைநிறுத்தம் (1906), ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் (1912), கப்பல், ரெயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம் (1920) ஆகியன ஸ்தாபன ரீதியானவை. மார்க்ஸ் வருணித்தது போல் 'துன்பம், ஒடுக்குமுறை, கேவலமான வாழ்க்கை, சுரண்டல், ஆகியவற்றிற்கு எதிராக ஒன்றுபட்ட நடவடிக்கையின் மூலம் விடிவு காணலாம் என்ற உணர்வின் வளர்ச்சியை இந்த வேலை நிறுத்தங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த வேலை நிறுத்தங்களை ஒழுங்கு செய்தவர்கள் இலங்கையின் முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ வகுப்புகளைச் சேர்ந்த முற்போக்கு எண்ணம் கொண்ட தனி நபர்களே. இவர்களுள் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தினர், மறைஞான சங்கத்தினர் (தியோசோபிஸ்டுகள்) சமூக சீர்திருத்தவாதிகள், மது ஒழிப்பு வாதிகள், அரசியல் விழிப்பு மிக்க தேசியவாதிகள் என்போர் இருந்தனர். இவர்களே நகரத்தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க நடவடிக்கை, வர்க்க உணர்வு ஆகியவற்றின் அடிப்படைகளைக் கற்றுக்கொடுத்தவர்கள். இந்த தலைவர்களிடம் எப்பொழுதும் ஒரு போஷகர் மனப்பாங்கு காணப்பட்டது. இணங்கிப்போதலையும், தீவிரமின்மையையும் இவர்கள் வற்புறுத்தினர். எனினும் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கான தொழிலாளரின் அடிப்படை உரிமைக்காகப் போரிட்டனர். அதே வேளை இவர்கள் தமது சொந்த உரிமைகளுக்காகவும் குரல் எழுப்பினர். மத்திய வகுப்பினருக்கு வாக்குரிமை, அரசியலில் பிரதிநித்துவம், இனசமத்துவம், பிரிட்டிஷ் உத்தியோக வகுப்பினர்க்கு உள்ளது போன்ற சம வாய்ப்பும் சந்தர்ப்பமும் என்பனவே இவர்களது கோரிக்கைகள்.

ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தின் அடுத்த கட்டம் 1920-ல் ஆரம்பிக்கிறது. இது தீவிர தொழிற்சங்கப் போராட்டங்கள் நிறைந்த காலமாகும். 1923-ல், ஏ. ஈ. குணசிங்க தலைமையிலான இலங்கை தொழிலாளர் சங்கத்தின் பொது வேலை நிறுத்தத்துடன் இது ஆரம்பமாகியது. இப் பொது வேலைநிறுத்தத்தில் 20,000 தொழிலாளர் பங்குபற்றினர். இதைத்தொடர்ந்து பல வெற்றிகரமான போராட்டங்கள் நடத்தபபட்டன. 1927-ல்

துறைமுக வேலை நிறுத்தம், 1928-ல் டாக்சி சாரதிகள், கைத் தொழில் துறை தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்களும் நிகழ்ந் தன. முடிவாக 1929 இன் ட்ராம் போக்குவரத்து தொழிலாளர் வேலைநிறுத்தம் அமைந்தது. இதில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர் இறந்தனர். 1920 க்களின் தொழிற்சங்கத் தலைமை பூர்ஷ்வா வகுப்பின் முற்போக்கு பகுதியில் இருந்து உரு வானது. இலங்கை தேசிய காங்கிரஸின் மிதவாதத் தலைவர்களை விட ஒருபடி மேல் நிலைக்கு ஜனநாயக உரிமைகளுக்கான போராட் டம் எடுத்துச் செல்லப்பட்டது. இதற்கு தீவிர தேசியவாதி யான ஏ. ஈ. குணசிங்க தலைமை கொடுத்தார். இலங்கைத் தேசிய காங்கிரஸ் 1919-ல் பூஷ்வாக்களால் உருவாக்கப்பட்டது. தொழி லாளர், முதலாளி உறவுகள், நிலமானிய அமைப்பின் மிச்ச சொச்சங்கள், சாதி, வர்க்கம், இனம், சமயம் என்ற அடிப்ப டையான பிரிவுகள், உள்ளூர் முதலாளிகள், விதேச முதலாளிகள் என்ற பல்வேறு பிரிவுகளின் கூட்டே இக் காங்கிரஸ். 'சுதந்திரம்', 'சமத்துவம்', 'சமூக சீர்திருத்தம்' என்பன இக்காலத்தில் இத் தாபனத்தால் முன்வைக்கப்பட்ட பிரதான கோஷங்களாகும். இதற்கு மாறாக குணசிங்காவின் இலங்கைத் தொழிலாளர் சங்க மும் (1922-ல் தொடங்கப்பட்டது), இலங்கைத் தொழிற் கட்சி யும் (1928-ல் தொடங்கப்பட்டது) அரசியல் சுதந்திரம், இனம், மொழி, பால் வேறுபாடுகளின்றி யாவருக்கும் அரசியல் உரிமை கள், தொழிற்சங்கங்களையும், வேலைநிறுத்த உரிமையையும் அங்கீ கரித்தல், ஆகக்குறைந்த கூலி நிர்ணயம், பென்சன் வழங்கல் முதலிய சமூக சீர்திருத்தச் சட்டங்களை தொழிலாளர் வர்க்கத்திற் காக ஏற்படுத்தல் என்ற கோரிக்கைகளை முன்வைத்தன.

1920 க்கு முற்பட்ட பூர்ஷ்வா வகுப்பின் முற்போக்குப் பிரிவின ரின் உலகக் கண்ணோட்டத்தை பௌத்தம், மறைஞானம் (தியோ சோபி), மனிதாபிமானம் என்பனவும் கிளாட்ஸ்ரோனின் தாராள வாதமும் சேர்ந்த கலப்புத்தத்துவம் எனலாம். இவர்களின் கோரிக்கைகள் சாரம்சத்தில் உயர்மத்திய வகுப்பின் கோரிக்கை களே. ஓரளவான அரசியல் சீர்திருத்தங்கள், சமூகத்தின் சில பகுதியினருக்கு வாக்குரிமை, சமத்துவம் என்பனவே இக் கோரிக் கைகள். ஆனால் 1920 க்களில் நிலைமை மாறியது. இக்காலம் பொருளாதார செழிப்புக்காலம். இலங்கை முதலாளித்துவம் தனது பொருளாதார பலத்தை இக்காலத்தில் ஸ்திரப்படுத்தியது. நகரத் தொழிலாளர் வகுப்பின் எண்ணிக்கையும், வர்க்க உணர் வும் இக்காலத்தில் கூடியது. பூர்ஷ்வா வகுப்பின் தீவிர முற் போக்குப் பிரிவினரும் குட்டி பூர்ஷ்வாக்களின் ஒரு பிரிவினரும் முன்

ணிக்கு வந்தனர். அரசியல் சீர்திருத்தம், சமூக மாற்றம் ஆகியவற்றிற்காக இவர்கள் தீவிர நடவடிக்கைகளில் இறங்கினர். இது தான் வரலாற்றில் 'குணசிங்க காலம்' எனப்படும். சமூக ஜனநாயகம் (Social democracy) இதன் தத்துவம்.

குணசிங்கவின் இலங்கைத் தொழிலாளர் சங்கத்திற்கு உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துடனோ அல்லது இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்துடனோ கூட ஒருவித தொடர்பும் இருக்கவில்லை. இந்திய தேசிய வாதிகளாலும், பிரிட்டிஷ் தொழிற்கட்சியாலுமே இவர் கவரப்பட்டார். கம்யூனிசம் இவரைக் கவரவில்லை. எனினும் இவர் இடைக்கிடை 'லெனின் உடைய சிங்கத்தை ஒத்த வீரதீர குணங்களை'ப் பாராட்டியிருக்கிறார். 1923 இன் பொது வேலை நிறுத்தத்தின்போது, இலங்கையில் கம்யூனிச தொடர்பு ஏற்பட்டுள்ளதாக கவர்ணர் சொன்னார். ஆனால் பொலிஸ் தலைமை அதிபதி வேலை நிறுத்தத்தை கம்யூனிஸ்டுகள் ஒழுங்கு செய்யவில்லை என்பதையிட்டு கவர்ணருக்கு உறுதிப்படுத்தினார். ஐரோப்பாவில் இருந்தும், இந்தியாவிலிருந்தும் குணசிங்காவிற்கு அனுப்பப்பட்ட கம்யூனிஸ்ட் பிரசுரங்கள் தபால் கந்தோரில் வைத்தே கைப்பற்றப்பட்டன. எனினும் கம்யூனிஸ்ட் தொடர்புகளின் சாத்தியம் பற்றிய பயம் இருந்தது. பௌத்த தலைவர் அநகாரிக தர்மபாலா மீது சந்தேகம் ஏற்பட்டது, அவரது நடமாட்டங்கள் கவனமாக அவதானிக்கப்பட்டன. அவர் ஐக்கிய அமெரிக்காவிற்கும், ஐரோப்பாவிற்கும் 1925-ல் விஜயம் செய்த போது பொலிஸ் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டது. 'பிரசித்திபெற்ற இந்திய போல்ஷெவிக்கும் பெர்லினில் இருந்து புரட்சிப் பிரசுரங்களை வெளியிடுபவருமான எம். என். ராய் உடன் தொடர்பு கொள்ளும் எண்ணத்துடனேயே இந்தப் பிரயாணம் மேற்கொள்ளப்படுகிறது என்று எண்ண இடம் உண்டு.' 1925 டிசம்பரில் வாஷிங்டன் உள்நாட்டு அமைச்சு அறிக்கையில் தர்மபாலா தொடர்பு கொண்டுள்ள குழு, 'அதே பழைய குழப்பக்கார கும்பல்தான், ஐரிஷ் புரட்சி இயக்கத்தில் இருந்தவர்கள் தான் இவர்கள். இன்று புரட்சி என்று தோன்றுவன எவை யெவையோ அவை பற்றியெல்லாம் கூச்சல் போடும் கும்பல்' என வருணித்தது.[2]

இலங்கைத் தொழிலாளர் சங்கமோ, இலங்கைத் தொழிற் கட்சியோ எந்த சந்தர்ப்பத்திலும் மார்க்சியத்தால் கவரப்படவில்லை. உண்மையில் இலங்கைத் தொழிற்கட்சி பிரிட்டிஷ் தொழிற் கட்சியால் வழிநடத்தப்பட்டது. அத்தோடு குணசிங்க புரட்சி

நடவடிக்கைகளை வெளிப்படையாகவே கண்டித்தார். 'நாட்டின் சுதந்திரம், பரிணும முறையில் அன்றிப் புரட்சி முறையில் அடைய முடியாது' என நம்பும் சமூக ஜனநாயகக் கட்சியே தமது இலங்கைத் தொழிற்கட்சி என இவர் பிரகடனம் செய்தார். அதேபோல் இலங்கைத் தொழிலாளர் சங்கம் 'ஒரு புரட்சி நோக்குள்ள கம்யூனிஸ்ட் ஸ்தாபனம் அல்ல' எனவும் அரசாங்கத்தால் கவனிக்கப்படா தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்கத் தோன்றிய ஸ்தாபனம் என்றும் கூறினுர்.[3]

வர்க்கமும் அரசியலும்[4]

*1929 - 1935* காலத்தில் இலங்கையைப் பிடித்த பொருளாதார மந்தம், *1920*-க்களின் தீவிரவாத தொழிற்சங்க இயக்கம் முற்றுக முறிந்துபோனமை, *1931*ன் டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் விளைவாக பூர்ஷ்வாவகுப்பினர் அரசில் தமது பங்கைப் பெற்றுக் கொண்டமை ஆகியனவே இலங்கை சமசமாஜக்கட்சியின் தோற்றத்திற்கான பொருளாதார அரசியல் பின்னணிகளாகும்.

பொருளியல் மந்தம் எவ்வளவுதூரம் இலங்கையைப் பாதித்தது என்பது அக்காலத்தின் ஏற்றுமதிப் புள்ளிவிவரங்களைப் பார்த்தால் புலனுகும். *1826*-ல் *503* மில்லியன் ரூபாவாக இருந்த ஏற்றுமதிகள் *1932*-ல் *170* மில்லியன் ரூபாவாகக் குறைந்தது. தேயிலை, கொப்பரா, காரீயம், ஆகியவற்றின் உலகச் சந்தை விலைகளில் சடுதியான வீழ்சசி ஏற்பட்டது. றப்பர் தொழிற்துறையில் மோசமான விளைவுகள் ஏற்பட்டன. தோட்டங்களில் வேலையின்மை பெருகியது. அரசாங்கத்துறையிலும் தனியார் துறையிலும் ஆட்குறைப்பு பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது. இப்பொருளாதார மந்தகாலத்தில் குணசிங்காவின் யூனியனுல் முன்புபோல் தீவிர நடவடிக்கைகளில் இறங்க முடியவில்லை. லேக்கவுஸ் (*1929*) டைம்ஸ் ஒப்சிலோன் (*1931*) கோல்பேஸ் ஹொட்டல் (*1933*) வேலை நிறுத்தங்கள் படுதோல்விகளில் முடிந்தன. இதனுல் தொழிற்சங்கப் போராட்டங்கள் கைவிடப்பட்டன.

இந்தக் காலப்பிரிவின் அரசியல் நிலைமையை விளங்கிக்கொள்வதற்கு ஏகாதிபத்தியம், தொழிலாள வர்க்கம் ஆகிய இருபக்கங்கள் சம்பந்தமாகவும் இலங்கை முதலாளித்துவ வகுப்பு என்ன வகையில் நடந்து கொண்டது, அதன் நிலை என்ன என்பதை விளங்கிக் கொள்ளுதல் அவசியம். இலங்கை முதலாளி வகுப்பிற்கு அரசியல் சட்ட சீர்திருத்தங்கள் வடிவில் சில சலுகைகள் வழங்கப்பட்டனவேனும் *1931* காலத்தில் ஏகாதிபத்தியம் தான் தொடர்ந்து பொருளாதார அரசியல் துறையில் ஆதிக்கம் பெற்றிருந்தது. இலங்கை முதலா

ளித்துவம் பிரதானமாக நில உடமையைக் கொண்டிருந்தது. ஏனைய துறைகளில் அது இறங்கவில்லை. பிரதான வர்த்தக நிறுவனங்கள் பிரிட்டிஷ் அல்லது இந்திய உடமைகளாகும். இருந்த ஒரு சில தொழிற்சாலைகளும் எஞ்சினியரிங் வேலைத்தலங்களும் வெளியார் உடமைகளாக அல்லது அரசாங்கத்தால் நடத்தப்பட்டனவாக இருந்தன. இலங்கைத் தொழிற்துறை முதலாளிகளோ அல்லது வர்த்தக முதலாளிகளோ இல்லாதமையால் பிரிட்டிஷ் நலன்களுக்கு எதிர்ப்பு இருக்க வாய்ப்பு இல்லாது போயிற்று. நில உரிமை சம்பந்தமாக (தரிசு நில உரிமைபற்றிய) பிரிட்டிஷ் நிர்வாகத்துடனுன இலங்கை முதலாளி வகுப்பிற்கு இருந்த முரண்பாடு 1830 அளவில் தீர்க்கப்பட்டுவிட்டது. இத்தீர்வு ஓரளவு இலங்கை முதலாளிகளுக்குச் சார்பாகவே அமைந்தது. றப்பர் தோட்டங்களில் மட்டும் விதேசிகளுடன் உள்ளூர் முதலாளிகளும் உடமையாளராக இருந்தனர். ஏனைய துறைகளில எல்லைகள் தெளிவாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. தோட்டங்களில் பிரிட்டிசார் மட்டும் ஏகபோக உரிமையை செலுத்தினர். உள்ளூர் முதலாளிகளுக்குரிய செல்வாக்குஎல்லையாக தென்னை, கறுவா, காரீயம், மரபுமுறை விவசாயம் என்பன அமைந்தன.

1931 அளவில் இலங்கை முதலாளித்துவத்தின் பிரதான கோரிக்கைகளான வாக்குரிமையும், அரசியல் பிரநிதித்துவமும் வழங்கப்பட்டுவிட்டன. 1912, 1920, 1923 ஆண்டுகளின் மாற்றங்களும் பின்னர் டொனமூர் சீர்திருத்தங்களும், வெகுஜன நடவடிக்கைகளோ, தீவிரபோராட்டங்களோ இல்லாத முறையில் முதலாளி வகுப்பின் கோரிக்கையான அரசியல் சீர்திருத்தத்தைப் படிப்படியாக வழங்கின. டொனமூர் திட்டப்படி முதன்முதலாக 1931-ல் சர்வசன வாக்குரிமை அடிப்படையில் அமைந்த தேர்தல் 50 தொகுதிகளுக்கு நடத்தப்பட்டது. 'இருபதுக்களில் சீர்திருத்தங்களுக்கான கிளர்ச்சியை நடத்திய இலங்கை தேசிய காங்கிரஸ் முப்பதுக்களில் செயலற்ற ஸ்தாபனமாகியது. முதலாளி வர்க்கம் தனது நோக்கங்களை எய்திவிட்டது. அதன் நோக்கம் ஏகாதிபத்திய அமைப்புக்குள் இருக்கும் அதே வேளை தனக்குச் சில அரசியல் சலுகைகளைப் பெற்றுக்கொள்வதாக மட்டும் இருந்தது.

நகர, தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தினருக்கு 1931 ஒரு முக்கிய திருப்பு மையமாக அமைந்தது. 1920 க்களின் தீவிர தொழிற்சங்கப் போராட்டங்களின் காரணமாக நகரத் தொழிலாளர் வர்க்க உணர்வு பெற்றிருந்தனர். நூற்றுக்கு மேற்பட்ட

வருடங்களாக சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உட்பட்டு வந்த தோட்டத் தொழிலாளர் மத்தியில் 1930 - 1931ல் முதன்முதலாகப் போராட்டங்கள் வெடித்தன. ஆனால் 1929 - 1935 காலப் பெரு மந்தம் நகரங்களிலும் தோட்டங்களிலும் தொழிலாளர் இயக்கத்தை அமுக்கிவிட்டது. பெருமந்தத்தின் விளைவுகளுக்குத்தொழிலாள வர்க்கத்தின் தலைமையால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

1920 க்களில் அரசியல், தொழிற் சங்கப் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியதும், 1930 க்களில் இதற்கு மாறாக தேசிய, தொழிற் சங்க ஸ்தாபனங்கள் முறிந்து போனமையும் ஒரு விசித்திரமான நிகழ்வுதான். தோட்டப் பொருளாதார அமைப்பு கைத்தொழில் முதலாளித்துவத்தின் எழுச்சிக்குத் தடையாக இருந்தது. பலமிக்க முதலாளித்துவ வகுப்பு இன்மையால் பலமான தேசிய இயக்கம் வளர்வதற்குத் தடையானதோடு கோணல் அரசியலுக்கும் காரணமாயிற்று. தேசிய காங்கிரஸ் தலைவர்கள் ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து கொண்டார்கள். டொனமூர் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொண்டதோடு 1931 ன் தேர்தல்களில் பங்குபற்றிப் புதிய சட்ட சபையின் அமைச்சர்களாகவும் பதவியேற்றனர். அவர்கள் பூரண சுதந்திரத்தைக் கோரவில்லை. காலனித்துவ அமைப்புக்குள் இயங்குவதிலே திருப்தியுற்றனர். இலங்கைத் தொழிற் சங்கத்தின் தலைவர்களும் போராட்டங்களைக் கைவிட்டனர்; இந்திய வம்சாவளித் தொழிலாளர்களுக்கு எதிரான இனக் குரோத நடவடிக்கைகளில் இறங்கியதோடு முதலாளிகளோடு வர்க்க சமரசம் செய்து கொண்டனர். 1933 அளவில் வேலை நிறுத்தங்களை முறியடிப்பதற்கு முதலாளிகளுக்கு உதவும் நிலைக்கு வந்துவிட்டனர். தோட்டங்களில் 1931 ல் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சமாஜம் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதன் பின் பொருளாதார மந்தம் காரணமாக இதன் நடவடிக்கைகள் ஒடுங்கிப் போயின. தனிப்பட்ட தொழிலாளர்களுக்காக முறையீடுகள் (பெட்டிசப்) எழுதுவதோடு இவர்கள் நின்றுவிட்டனர். இந்தச் சூழலில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்கும், தொழிலாள வர்க்க இயக்கத்திற்கும் தலைமை தாங்கக்கூடிய ஒரு அரசியல் கட்சியைத் தாபிக்க வேண்டியதன் அவசியத்தை முதலாளி வர்க்கத்தின் முற்போக்குப் பகுதியினரும் குட்டி முதலாளி வர்க்கத்தினரும் உணந்தனர்.

1935 ல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கைச் சம சமாஜக் கட்சி மேற்குறித்த இரு பணிகளையும் மேற்கொண்டது. பலமிக்க முதலாளி வகுப்பு ஒன்றினால் நடத்தப்படும் தேசிய இயக்கம் ஒன்று

(இந்தியாவில் இருந்தது போன்று) இல்லாத படியால் தேசியப் போராட்டத்தை வழி நடத்துவதும் இதன் பொறுப்பாகியது. அதே வேளை தோட்டங்களிலும் நகரங்களிலும் முதலாளித்துவத்தை எதிர்க்கக்கூடிய தொழிற் சங்க இயக்கம் இன்மையும், நாட்டுப்புறத்தில் நிலமானியத்தின் மிச்ச சொச்சங்களை எதிர்த்து போரிடும் இயக்கம் இன்மையும் காரணமாக சோஷலிச நடவடிக்கையும் இதன் பொறுப்பாகியது. புதிய கட்சி, அரசியல் தொழிற் சங்கப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி அரசியல் சீர்திருத்தத்திற்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் போராடும் கடமையையும் ஏற்றது.

சர்வதேச நிலைமை

ல. ச. ச. கட்சி உதயமாகியதற்குக் காலான நிகழ்ச்சிகள் பற்றி நோக்கும் பொழுது புரட்சிகர இயக்கங்கள் தொடர்பாக நிலவிய சர்வதேசச் சூழலையும் கவனித்தல் வேண்டும். 1920 க்களின் பிற்பகுதியிலும் முப்பதுக்களின் முற்பகுதியிலும் உலகின் பலபாகங்களில் இடதுசாரி இயக்கங்கள், பல தோல்விகளை அடைந்தன. 1926 ம் ஆண்டில் பிரிட்டனின் பொது வேலை நிறுத்தம் தோல்வி கண்டமை, இத்தாலியில் முசோலினியின் பாசிச ஆட்சியின் எழுச்சி, 1927 ல் சீனக் கம்யூனிஸ்டுகளின் தோல்வி, 1933 ல் ஹிட்லரின் எழுச்சி என்பன அவற்றுள் முக்கியமானவை. அதே வேளை சோவியத் ரஷ்யாவில் இடதுசாரி எதிர்ப்பு ஒன்றும் தோன்றியது. 1929ல் லியோன் ரொட்ஸ்கி நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார். இது கம்யூனிச இயக்கத்தின் உட்பிரச்சினைகளை வெளிக்காட்டியது. இந்தக் கால கட்டத்தில் கம்யூனிஸ இயக்கம் பல முக்கியமான அரசியல், தந்திரோபாய பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. பாசிசத்தின் பயங்கர அச்சுறுத்தல், சமூக ஜனநாயக வாதிகள் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நிலை, காலனித்துவ நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கம் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நிலை என்பன இத்தகைய முக்கிய பிரச்சினைகளாகும்.

1927 ன் பின்னர் இலங்கையில் தொழிற் சங்க நடவடிக்கைகள், எழுந்ததும், இந்திய தொழிற் சங்கங்களில் கம்யூனிஸ்ட் செல்வாக்கு அதிகரித்தமையும் இலங்கையிலும் கம்யூனிசம் பற்றிக் காரணமற்ற பயத்தைத் தோற்றுவித்தது. இலங்கையின் முக்கிய முதலாளி ஒருவர் (எச். எல். டி மெல்) 1928ல், இலங்கை தொழிலாளர் சங்கத்தின் மூலம் தொழிலாளர் செய்து வரும் பயமுறுத்தல்கள் பற்றி ஒரு அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைத்தார். 'இந்த விடயமாக பொலிஸ் தலைமை அதிபதியின் கவனம் செலுத்

தப்பட வேண்டும். தொழிலாளர்கள் மீது போல்ஷெவிக்குகள் செலுத்தும் அதிகாரத்திற்கு முடிவு வேண்டும்.' என்றும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறினர். 1929 ல் ட்ராம் வண்டித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போதும் இத்தகைய சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. பிரிட்டனின் 'டைம்ஸ்' பத்திரிகை இலங்கையின் தொழிலாளர் பிரச்சினைகள் மொஸ்கோவின் தூண்டுதலால் ஏற்பட்டவை என எழுதியது. இக்குறிப்புக்கு எதிர்ப்புகள் எழுந்தன. ஒரு பத்திரிகை இதற்கு மறுப்புத் தெரிவிக்கையில் உண்மையில் இலங்கையர் நலனில் கன்சவேடிவ் கட்சியினருக்கு அக்கறை இருக்குமானல் அவர்கள் மொஸ்கோ என்று கூச்சல் போடுவதை விட்டு இலங்கையின் சாதாரண பொது சனங்கள் மத்தியில் உள்ள கல்வி வசதிக் குறைவுகள் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும்' எனக் குறிப்பிட்டது.[5]

1927-1935க்கு இடையில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் கொள்கைகளில் மிக முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. 1927ல் 'முதலாளித்துவம்' ஏகாதிபத்தியம் என்பனவற்றின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடும் எல்லா அரசியல் ஸ்தாபனங்கள், கட்சிகள், தொழிற் சங்கங்கள், தனிநபர்கள் ... உள்ளடங்கிய ஸ்தாபனம் ஒன்றை 'ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி' என்ற பெயரில் கம்யூனிஸ்டுகள் உருவாக்கினர்கள். 'ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, எல்லாப் புரட்சிகர சக்திகளையும், ஒடுக்கப்பட்ட காலனித்துவ நாடுகளில் சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்குமாக போராடும் சக்திகளையும் உலகு தழுவிய ஒரு இயக்கத்தில்' ஒன்றிணைப்பதே தமது நோக்கம் என முன்னணி தெரிவித்தது. இந்த நிறுவனத்தின் நிர்வாக சபையில் கம்யூனிஸ்ட்டுகள் அல்லாத தேசிய வாதிகளான நேரு, மொகமட் ஹட்டா (இந்தோனேசியா) லமன் செங்கோ (பிரஞ்சு மேற்கு ஆபிரிக்கா) ஆகியோரும் இடம்பெற்றனர். எனினும் 1931 அளவில் இத்தகைய தேசிய வாதிகள் பற்றிய கணிப்பில் மாற்றம் ஏற்பட்டது. 'புரட்சிகரப் போராட்டம் ஒன்று இல்லாமல் தேசிய விடுதலை அடையலாம் என்ற பொய் எண்ணத்தைப் பரப்பும் இந்தத் தேசிய சீர்திருத்த வாதிகள்' பற்றி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. இக்காலத்தில் நேரு, காந்தி, சுபாஸ் சந்திரபோஸ் ஆகியோர் துரோகிகள் எனவும் ஏகாதிபத்திய ஏஜன்டுகள் எனவும் கண்டிக்கப்பட்டனர். ஆனல் 1935 ல் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக எழுந்த பாசிசத்திற்கு எதிராக, 'பாசிசத்திற்கு எதிரான மக்கள் முன்னணி' அமைக்கப்பட வேண்டும் என்று தன் கொள்கையை மாற்றிக் கொண்டது. அரசியல் துறையில் சமூக ஜனநாயக வாதிகளுடனும் தொழிற்துறை விடயங்களில்

அச்சமயம் இருந்த தொழிற் சங்கங்களுடனும் கூட்டாக இயங்கு மாறு கம்யூனிஸ்டுகள் வேண்டப்பட்டனர்.[6]

## இலங்கை மாணவ சோஷலிஸ்ட்டுகள்

முதல் உலகயுத்தத்தின் முன்னர் பிரிட்டனின் பல்கலைக் கழகங் களில் படிக்கச் சென்ற மாணவர்கள் பெரும் நில உடமையாளர் களின் பிள்ளைகளாக அல்லது சட்டம், வைத்தியம் முதலிய தொழில்களைச் சார்ந்தோரின் பிள்ளைகளாகவே இருந்தனர். 1920க் களில் எல்லா வகை விவசாயப் பொருட்களிலும் வர்த்தக செழிப்பு (குறிப்பாக தெங்கு, றப்பர்) ஏற்பட்டமையால் புதுப் பணக்காரர் களான கிராமப்புற முதலாளிகளுக்கும், குட்டி முதலாளி வகுப் பினருக்கும் கூட தம் பிள்ளைகளுக்கு வெளிநாட்டுப் பல்கலைக் கழகக் கல்வியை அளித்தல் சாத்தியமாயிற்று. முந்திய கால கட்டத் தைச் சேர்ந்த செல்வந்த வகுப்பு மாணவர்கள் ஒரு சில கிறிஸ் தவ பாடசாலைகளில் இருந்து கேம்பிரிட்சுக்கும் ஒக்ஸ்போர்ட்டுக் கும் சென்றவர்களாய் இருந்தனர். பிற்காலத்தில் மாகாணங் களில் உள்ள பௌத்த பாடசாலைகளில் பயின்றோர் லண்டன் பல் கலைக் கழகம் போன்ற செலவு குறைந்ததும் அவ்வளவாக மதிக் கப்படாதவையுமான பல்கலைக் கழகங்களை நாடிச் சென்றனர்.

இருபதாம் நூற்றாண்டில், லண்டனில் இலங்கை மாணவர் சங்கம் இலங்கை இளைஞர்கள் கூடி அரசியல் விவாதங்களில் ஈடு படும் முக்கிய களமாக விளங்கியது. 1920 க்களில் சோஷலிட்ஸ் மாணவர்களின் செல்வாக்கு இச்சங்கத்தில் இருந்தது. இவர்கள் பொதுவான மாணவர் இயக்க நடவடிக்கைகளில் அக்கறை கொண்டிருந்ததோடு அல்லாமல், சோஷலிசம் பற்றியும் இலங்கை யில் சோஷலிசக் கட்சி ஒன்றை நிறுவுவது பற்றியும் தனியாகக் கூடியும் கலந்துரையாடினர். பிலிப் குணவர்த்தன, லெஸ்லி குண வர்த்தன, கொல்வின் ஆர். டி. சில்வா, என். எம். பெரேரா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க ஆகியோர் இக்குழுவில் இருந்த வர்களே.[7] லெஸ்லி குணவர்த்தன மட்டுமே கிறிஸ்தவ உயர் குழாத்தில் தோன்றியவர். ஏனைய யாவரும் சிங்கள மொழியை வீட்டில் பேசும் பௌத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர் கள் பௌத்த சமய கல்லூரிகளில் அல்லது அரசாங்கக் கல்லூரி களில் கல்வி பெற்றோர்கள். அநகாரிக தர்மபாலவின் தேசியக் கிளர்ச்சியால் கவரப்பட்டார்கள். 1915 ம் ஆண்டின் கலகத் தைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒடுக்குமுறைக்கு இவர்களிடம் எதிர்ப் புணர்ச்சி தோன்றியிருந்தது.

மேற்குறித்த சோஷலிஸ்ட் மாணவர்களை ஆகர்ஷித்த இயக்கங்கள் இரண்டாகும். ஒன்று இந்திய தேசிய விடுதலை இயக்கம். மற்றது மார்க்சியம். 1920 க்களின் பிற்பகுதியில் இந்திய தேசிய இயக்கம் தீவிர கட்டத்துள் நுழைந்தது. இந்திய தேசிய காங்கிரஸ் சைமன் கமிசனின் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை நிராகரித்தது. அத்தோடு காங்கிரஸிற்குள்ளே கம்யூனிஸ்ட்டுகளினதும், இடதுசாரிகளினதும் செல்வாக்கு இருந்தது. லண்டனில் வசித்த மாணவர்கள் லண்டன் மஜ்லிஸ் என்ற மாணவர் மன்றம் மூலம் தேசியக் கிளர்ச்சி நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். இலங்கை மாணவர் சங்கத்தைச் சேர்ந்த சிலர் (குறிப்பாக எஸ். ஏ. விக்கிரமசிங்க) மஜ்லிஸ் உடனும் இந்தியா லீக்குடனும் ஒன்றிணைந்து செயற்பட்டனர். இந்தியா லீக்கின் முக்கிய உறுப்பினர்களாக கிருஷ்ணமேனன், பென்னர் புரூெக்வே, வண-சொறன்சன் ஆகியோர் விளங்கினர். எஸ். ஏ. விக்கிரமசிங்க பிரிட்டனில் இருந்து இலங்கைக்குத் திரும்பிய போது 1928 ல் இந்தியா சென்று இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் மாநாட்டில் பங்குபற்றினர். பின்னரும் அடிக்கடி இவர் இந்தியா சென்று வந்தார். 1931 உப்புச் சத்தியாக்கிரகத்தில் காந்தி கைதான செய்தி வெளிவந்த சமயம் இவர் பனரீஸில் தங்கியிருந்தார். காந்தி கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டினல் காயமுற்ருேர்க்கு மருத்துவ சிகிச்சை செய்தார். இவர் சிறைச்சாலைக்குப் போய்க் காந்தியைச் சந்தித்ததோடு சாந்திநிகேதனில் 1933 ல் சில நாட்களைச் செலவிட்டபோது தாகூரையும் அங்கு சந்தித்தார்.

இந்தக் காலகட்டத்தில் இங்கிலாந்தில் இருந்த இலங்கை இந்திய மாணவர்கள் மத்தியில் பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் பால் ஏமாற்றமும் விரக்தியும் ஏற்பட்டது. காலனித்துவக் கொள்கையில் ஏகாதிபத்திய நோக்கும் உள்நாட்டுக் கொள்கையில் சீர்திருத்தவாதத்தையும் கொண்டிருந்த கட்சியாக அதைக் கருதினர். இக்காரணத்தால் கம்யூனிஸ்ட் கட்சியினதும், தொழிற் கட்சியின் இடதுசாரிப் பிரிவினர்களதும் கோஷங்கள் குடியேற்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களைக் கவர்ந்தன. அத்தோடு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் மிக முக்கிய அங்கத்தவர்களில் இருவர் (ஆர். பாமிதத், எஸ். சாக்லத் வால) இந்தியர்களாக இருந்தமையால் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இந்திய இலங்கை மாணவர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. லண்டனில் இந்திய கம்யூனிஸ்ட் மாணவர் குழுவில் பிலிப் குணவர்த்தனவும் லெஸ்லி குணவர்த்தனவும் அங்கம் வகித்தனர். அமெரிக்கா, பெர்

லின், பாரிஸ் போன்ற இடங்களில் இருந்தபோது பிலிப் குண வர்த்தன இந்தியப் புரட்சிக் குழுக்களுடன் சேர்ந்து உழைத்தார்.

கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன் இயங்கிய ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி 1928ல் லண்டனில் தனது மாநாட்டை நடத்தியது, குடியேற்ற நாட்டு மாணவர்களை இந்நிகழ்ச்சி கவர்ந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி இரண்டாவது அகிலத்தையும், பிரிட்டிஷ் தொழிற் கட்சியையும் கண்டனம் செய்தது. சைமன் கமிசனில் பங்கு கொண்டதன் மூலம் 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து கொண்டதாக' தொழிற் கட்சி குற்றம் சாட்டப்பட்டது.[8] 1929 - 1931க்கு இடைப்பட்ட காலத்தில் பிலிப் குணவர்த்தன ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியின் செயற்குழு உறுப்பினராக இருந்தார்.

பிரிட்டிஷ், அமெரிக்க பல்கலைக் கழகங்களின் மார்க்சீய ஆய்வறிவாளர்களுடன் கொண்ட பரிச்சயம் காரணமாக இலங்கை மாணவர்கள் பலர் மார்க்சியம் பற்றிய கொள்கைத் தெளிவைப் பெற்றிருந்தனர். பல்வேறு கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களில், குறிப்பாக பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினர்களாக இருந்ததன் மூலம் செயல்முறை அறிவையும் இவர்கள் பெற்றனர். கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருந்த இடதுசாரி எதிர்ப்பாளர்களின் கருத்துக்கள் பிலிப் குணவர்த்தனவைக் கவர்ந்தன. இவர் இலங்கைக்கு திரும்பும் வழியில் பிரான்சிலும், ஸ்பெயினிலும் ரொட்ஸ்கி இஸ குழுக்களுடன் தொடர்பு கொண்டார்.

௨

இலங்கையில் அக்காலத்தில் இருந்த ஏனைய அரசியல் ஸ்தாபனங்களில் இருந்து, இந்த சோஷலிஸ்ட் மாணவர்களின் கருத்துக்கள் எந்தளவு வேறுபாடு உடையவை என்பதை அவதானித்தல் அவசியமானது. இரு முக்கிய விடயங்கள் சம்பந்தமாக அவர்கள் எடுத்த நிலைப்பாட்டைக் கொண்டு இதை மதிப்பிடலாம். முதலாவது அரசியல் சீர்திருத்தம் பற்றியது. மற்றது தொழிற் சங்க இயக்கம் பற்றியது. டொனமூர் சீர்திருத்தங்களையும் குணசிங்கவின் இலங்கைத் தொழிற் கட்சியையும் பிரிட்டிஷ் தொழிற் கட்சி அக்காலத்தில் ஆதரித்தது. லண்டனில் இருந்த சோஷலிஸ்ட் மாணவர்கள் அரசியல் சீர்திருத்தங்கள், குணசிங்கவின் தொழிற் சங்கக் கொள்கை ஆகிய இரண்டிற்கும் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இலங்கையில் பூர்ஷுவா வகுப்பின் பாத்திரம் பற்றிய விடயம் கருத்து வேறுபாட்டுக்குரியதாக இருந்தது. 1928 ல் டொனமூர் சிபார்சுகள் வெளியிடப்பட்டதும் லண்டனில் இருந்த இலங்கை மாணவர்கள் இது பற்றிய கலந்துரையாடல்களை தொடர்ச்சியாக நடத்தினர். கிருஷ்ணமேனன், எஸ். சக்லத்வால, டி. பி. ஜயதிலக ஆகியோர் இவற்றில் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர். இந்தச் சீர்திருத்தங்கள் பற்றி மாணவர்கள் தீவிரமாக ஆராய்ந்தனர். தமது கலந்துரையாடல் முடிவுகளை 1928 ல் ஒரு சிறு நூலாக எஸ். ஏ. விக்கிரமசிங்காவும், கிருஷ்ணமேனனும் வெளியிட்டனர். இந்தப் பிரசுரத்தில், பிரிட்டிஷ் தொழிற் கட்சியும் ஏ. ஈ. குணசிங்கவும் இலங்கை பூர்ஷுவா வகுப்பு சம்பந்தமாகக் கொண்டிருந்த கொள்கையைக் கண்டித்தனர். பிரிட்டிஷ் தொழிற் கட்சி, இலங்கைத் தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்கள் அதிகாரத்தை அவாவும் ஒரு சிறு குழு எனக் கருதியது. குணசிங்க இலங்கைத் தலைவர்கள் பற்றி வேறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தார். பொறுப்பாட்சியை வழங்கி இவர்கள் கையில் அதிகாரம் கொடுப்பதற்கு முன்னர் வாக்குரிமையை எல்லாருக்கும் உரியதாக்க வேண்டும் என்றார். லண்டனில் இருந்த மாணவர்கள் குழுவினரின் அபிப்பிராயம் அக்காலத்தைய கம்யூனிஸ்ட் கொள்கைக்கு இசைவாக இருந்தது. விதேசிய ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் தேசிய முதலாளித்துவத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்றும், விதேசிய ஆட்சியிலும் இந்தச் சுதேசிய முதலாளிக் குழு மேலானதென்றும் அவர்கள் கருதினர். சுதேசிய முதலாளிகள் 'இந்நாட்டு மக்களைப் பற்றி அறிந்தவர்கள், இனம், பண்பாடு என்ற அம்சங்களால் தொடர்புடையவர்கள், இவர்கள் ஒரு சிறு குழுவினர், ஒரு வட்டத்தினர் ஆயினும் காலப்போக்கில் அதிகாரம் பரவலாகும் சாத்தியமும் உள்ளது' எனக் கருதினர்.

சர்வசன வாக்குரிமை பயன் தருவதே என மாணவர்கள் அபிப்பிராயப்பட்டனர். எனினும் உடனடியாக அதன் பயன்கள் கிட்டுமென நம்புவதற்கில்லையென்றும் 'பொருளாதார ரீதியில் வலுவுள்ளோர் பிடியில் பெரும்பாலான வாக்காளர் இருப்பதால் அவை அவர்களுக்குச் சாதகமாகத் திருப்பப்படும்' என்றும் கருதினர். டொனமூர் குழுவினர் 'பழைய பாணியிலேயே இவ்விடயத்தைப் பார்த்திருக்கிறார்கள். இதன் அரசியல் அம்சங்களை நோக்கினார்களே தவிர பொருளியல் அம்சங்களை நோக்கவில்லை'

என்றும், இலங்கைத் தொழிலாளர் பிரச்சினை பற்றிக் கூறுவதை வேண்டுமென்றே டொனமூர்க் குழு தவிர்த்திருக்கிறதென்றும் மாணவர்கள் குற்றம் சாட்டினர். தொழிலாளர் பிரச்சினை பற்றி டொனமூர் அறிக்கையில் கூறப்பட்டிருந்தால் இலங்கையில் நடைபெறும் சுரண்டல் பற்றி 'பிரிட்டிஷ் பாராளுமன்றம், இலங்கை அரசாங்கம், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஆகியவற்றின் கவனத்தை இதன்பால் திருப்பவாகுதல் உதவியிருக்கும்' என்று கூறினர். பிரிட்டிஷ் நிர்வாகத்திற்கும், தோட்ட முதலாளிகளின் நலன்களுக்கும் பாதகமாக அமையும் எனக் கருதியதால் வேண்டுமென்றே தொழிலாளர் நிலை பற்றிக் கூறுதுவிட்டனர் என மாணவர்கள் குற்றம் சாட்டினர். டொனமூர் குழுவின் ஒரு உறுப்பினராக தொழிற் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி டர்மன்ட் ஷீல்ஸ் இருந்தார். 'இவர் முழுத் தொழிலாளர் வர்க்கத்தின் சார்பாகவும்' தன்மீது சுமத்தப்பட்ட பொறுப்பைத் தட்டிக்கழித்தவர் என மாணவர்கள் சாடினர்.[9]

ஏ. ஈ. குணசிங்க பற்றிய நிலைப்பாடு

ஏ. ஈ. குணசிங்கவின் இலங்கைத் தொழிலாளர் சங்கம் இலங்கைத் தொழிற் கட்சி ஆகியவற்றையும் லண்டன் மாணவர் குழு நிராகரித்தது. 1922 தொடக்கம் பொருளியல் மந்தம் வரையான காலம் வரை கொழும்பு நகரத் தொழிலாளர்களின் போராட்டங்களை வழி நடத்தியது இலங்கைத் தொழிலாளர் சங்கமே. இதேபோன்று அரசியல் அரங்கில் தொழிற் கட்சி தான் பெரிய தீவிர முற்போக்கு சக்தியாக விளங்கியது. இக்காரணங்களால் குணசிங்க பற்றிய தெளிவான நிலைப்பாடு ஒன்றை முன்வைத்தல் இலங்கை மாணவர் குழுவிற்கு அவசியமானதாயிற்று. இளைய தலைமுறையைச் சேர்ந்த தேசியவாதிகள் குணசிங்கவின் சுய ஆட்சி, சர்வசன வாக்குரிமை, தொழிற் சங்க உரிமைகள், கூலி உயர்வு, வேலை செய்யும் சூழலை மேம்படுத்தல் ஆகிய கோரிக்கைகளை ஆதரித்தனர். ஆனால் தொழிற் சங்கத்தின் தலைமைப் பீடத்தின் மீது அதிருப்தி வளரலாயிற்று. குறிப்பாக 1929 சம்பவம் அதிருப்திக்குக் காரணமாயிற்று. இந்த ஆண்டில் நிகழ்ந்த பொது வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு முதலாளிகளுடன் கூட்டு உடன்படிக்கை ஒன்று கையெழுத்திடப்பட்டது.

குணசிங்க பற்றியும் தொழிலாளர் இயக்கம் பற்றியும் மார்க்சீய அடிப்படையிலான ஆய்வை பிலிப் குணவர்த்தன 1931ல் ஒரு கட்டுரை மூலம் வெளியிட்டார். தொழிலாளர் சார்பாக குணசிங்க நடத்திய போராட்டங்களுக்காக அவரைப் பாராட்

டிய பிலிப் குணவர்த்தன 'துணிச்சலும் செயலூக்கமும் மிக்கவர்' என அவரைப் புகழ்ந்தார். தொழிலாளர் போராட்டத்தின் உச்ச நிலையாக அமைந்த வேலை நிறுத்தம், 1929 ட்ராம் தொழிலாளர் வேலைநிறுத்தமும் கலகமும் ஆகும் என்று இக்கட்டுரையில் விபரிக்கும் பிலிப் குணவர்த்தன இது பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். வேலைநிறுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட கலகத்தில் மருதானை பொலிஸ் நிலையத்திற்குத் தீ வைக்கப்பட்டது.

> 'தொழிலாளர்களின் புரட்சிகர உணர்வும் செயலூக்கமும்' தியாகமும் உச்சநிலையை அடைந்தன. ... தமது வர்க்க நலன்களைப் பேணவும் முதலாளித்துவ அதிகாரத்தின் சின்னத்தை அழித்தொழிக்கவும் அவர்கள் துணிந்தனர்........... சிக்கலான கட்டத்தில் அவர்கள் காட்டிய தீரமும், செயல் திறமும் அசாதாரணமானது. இந்தச் சமயத்தில்தான் பாராளு மன்ற உறுப்பினர்கள் அரசியல் சட்ட அதிகாரம் பற்றி மயிர்பிளக்கும் வாதங்களை நடத்தினர். ......... தேசியவாதிகள் பயத்தால் நடுங்கியவராய் ஏகாதிபத்தியத்தின் காலடியில் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து, தம்மை தமது வர்க்க எதிரிகளிடமிருந்து காப்பாற்றும்படி மன்றாடினர். ...... விதேசிய ஆக்கிரமிப்பாளர் மீது அவர்களுக்கு இருந்த பயத்தை விட தமது வர்க்க எதிரிகளான தொழிலாளர்களால் ஏற்பட்ட பயம் பெரிது.'

வர்க்கப் போராட்டத்தின் தீவிர நிலையின் வெளிப்பாடாக அமைந்ததே வேலைநிறுத்தம் என்று விளக்கிய குணவர்த்தன டிரும் தொழிலாளர்கள் 'முதலாளித்துவ சமூகத்தின் சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கவில்லையென்றும் முதலாளித்துவ அதிகார பலத்தைத் தொழிலாளர் செயலற்றதாக்கினர் என்றும் கூறுகிறார். அவர்களுக்குச் சரியான வழிநடத்தலோ, முன்னேற்பாடுகளோ இல்லாதிருந்த போதும் உலகின் முதல்தரமான சாம்ராச்சியத்தின் படை பலத்திற்கு சவால் விடக்கூடியவர்களாக இருந்தார்கள். தொழிலாளர்களின் தீவிரத்திற்கு மாறான முறையில் குணசிங்க சரியான தலைமை கொடுக்கத் தவறியதன் மூலம் குழப்பநிலையை உருவாக்கினர்- பிரிட்டிஷ் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சேவைகளைப் பாராட்டியதும், வேலைநிறுத்தம் சமரசத்திற்குக் கொண்டுவரப்பட்டதும் வர்த்தக சம்மேளனத்தின் (Chamber of Commerce) தலைவரைப் பாராட்டும் முறையில் ஆரவாரம் செய்யும்படி குணசிங்க தொழிலாளர்களை வேண்டிய

தும் அவருடைய முதல்தரமான தந்திரோபாய ரீதியான தவறுகள் என்று பிலிப் குணவர்த்தன சுட்டிக் காட்டுகிறார்.[10]

## பிரிட்டிஷ் தொழிற் கட்சி மீது கண்டனம்

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் இடதுசாரிப் பிரிவினரும் கம்யூனிஸ்டுகளும் கட்சியின் தலைமைப் பீடம் பற்றி 1920 க்களின் பிற்பகுதியில் காரசாரமான கண்டனங்களைத் தெரிவித்தனர். அத்தோடு பிரிட்டிஷ் தொழிற் சங்க இயக்கம் பற்றியும், குறிப்பாக மொண்ட் - ரேணர் பேச்சுவார்த்தை பற்றியும் கண்டனம் தெரிவித்தனர். முதலாளிகளுடன் தொழிலாளர் ஐக்கியப்பட்டு தொழில்துறை அமைதியைப் பேணும் முதல் முயற்சியாக இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ரீஸ் தாபனத்தின் தலைவர் சேர் அல்பிரட் மொண்ட், பிரிட்டிஷ் தொழிற்சங்க காங்கிரஸின் தலைவர் பென் ரேணர் ஆகியோருக்கு இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளைக் குறிப்பிடலாம்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளால் கவரப்பட்டிருந்த இலங்கை மாணவர் குழு;. ஏ. ஈ. குணசிங்க அரசியல், தொழிற் சங்க இயக்கம் என்ற இரு விடயங்களிலும் பிரிட்டிஷ் தொழிற் கட்சியுடன் வைத்திருந்த உறவைச் சுட்டிக் காட்டி விமர்சித்தனர். கற்பனை சோஷலிசம் என்ற மாயையை குணசிங்கவிற்குப் புகட்டிய தலைவர்கள், ராம்சே மக்டோனல்டு, டர்மொண்ட் ஷீல்ஸ், ஜோர்ஜ் லான்ஸ்ப்யூரி ஆகியோரே என்றும் 'மொண்டிசம்' என்ற தத்துவத்தின் உண்மைகளை பிரிட்டிஷ் தொழிற் சங்க தலைவர்களிடம் இருந்து இவர் பயின்றார் என்றும் கண்டித்தனர். 1928 ல் இங்கிலாந்து சென்று திரும்பிய குணசிங்க 'தொழில் அமைதிக் கொள்கையின் விசுவாசம் மிக்க போதகராகவும் வர்க்க சமரசவாதியாகவும்' மாறினார், 1929 ல் கூட்டு ஒப்பந்தத்தில் இவர் கையெழுத்திட்டது இந்தச் செல்வாக்கின் காரணமாகத்தான் என்று கூறப்பட்டது. 'குணசிங்க இங்கிலாந்தில் இருந்து திரும்பியதும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் எஸ். பி. ஹெயிலி அவசர அவசரமாக முதலாளிகள் சமாஜத்தை உருவாக்கி தொழிலாளர் சங்கங்களுடன் சமரசம் பேசத் தயார்ப்படுத்தினர். 'முதலாளிகள் மத்தியில் பேசிய ஹெயிலி ஹீபுருதீர்க்கதரிசி ஒருவரின் தொனியிலேதான் பேசினர்... முடிவில் தொழிலாளர் வேலை நிறுத்தங்களைத் தடைசெய்யும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது' என பிலிப் குணவர்த்தன குற்றம் சாட்டினர். முதலாளிகள் சமாஜத்தோடு குணசிங்க சமரசம் பேசிய

சம்பவம் தொழிலாள வர்க்கத் தலைவர்கள் முதலாளித்துவ சமுதாயத்தின் மோகவலையில் இருந்து தப்புவது எவ்வளவு தூரம் கடினமானதென்பதற்கு உதாரணமென்றும் பிலிப்குணவர்த்தனு சுட்டிக் காட்டினர். 'தொழிலாளர் வர்க்கத்தின் தோள்மீது ஏறி நின்று கொண்ட குணசிங்க ஏகாதிபத்திய அமைப்புக்குள் உயர் நிலையையும் பதவி அங்கீகாரத்தையும் அவாவி நின்ருர். பிரிட்டனின் தொழிற்கட்சி அரசாங்கம் இவரது ஆசைகளுக்குத் தூபம் போட்டு அவற்றை இரட்டிப்பாக்கிவிட்டது' என்று பிலிப் குணவர்த்தனு குறிப்பிட்டார்.[11]

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் பாதகமான செல்வாக்கில் இருந்து தொழிற்சங்கங்களை மீட்பதற்காக அவை வெளிநாடுகளில் உள்ள உண்மையான தொழிலாள வர்க்க ஸ்தாபனங்களுடனும் இந்தியாவின் புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்துடனும் தொடர்பு கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டது. சர்வதேச தொழில் ஸ்தாபனம், இரண்டாவது சோஷலிஸ்டு அகிலம், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் தொழிற்சங்க அதிகார வர்க்கம் ஆகிய பாதிப்புகளுக்கு எதிரான எச்சரிக்கைகளும் தெரிவிக்கப் பட்டன.

லண்டனில் இருந்த இலங்கைச் சோஷலிச மாணவர்களின் கருத்துக்கள் இலங்கையின் அரசியல், தொழிற்சங்க இயக்கங் களுக்குப் புதிய தத்துவக் கண்ணோட்டத்தை முன் வைத்தன. இம்மாணவர்கள் வெளிநாடுகளில் இருந்த காலத்தில் அவர் களது கிளர்ச்சி நடவடிக்கைகள் மாணவர் இயக்கம், வெளிநாடு களின் தேசிய இயக்கங்கள், கம்யூனிஸ்ட் இயக்கங்கள் ஆகியன சார்ந்தனவாக இருந்தன. 1930 க்களின் முற்பகுதியில் இம் மாண வர் குழுவின் செயலூக்கம் மிக்க உறுப்பினர் பலர் தாய்நாடு திரும்பியதும் இவர்களது கருத்துக்களின் தாக்கம் இலங்கையில் வெளிப்படலாயிற்று. அவர்கள் ஒரு அரசியல் கட்சி தொடங்கப் படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர். 1935-ல் இத்தகைய கட்சி உருவாகியது. அதுவரை இவர்கள் ஏற்கனவே தனது செல்வாக்கை நாடு பூராவும் பரப்பியிருத்த இளைஞர் இயக்கத் துடன் சேர்ந்து செயற்பட்டனர்.

### இலங்கையில் இளைஞர் இயக்கம்

1920 க்களில் இலங்கையில் கல்விகற்ற தேசிய உணர்வுடைய இளைஞர்களிடையே அன்று நிலவிய அரசியல் இயக்கங்கள் பால்

அதிருப்தி நிலவியது. அரசியல் சமூக பொருளாதார விடயங்களில் புதிய போக்கை இவர்கள் வேண்டி நின்றனர். இலங்கைத் தேசிய காங்கிரஸ் புதுமையை விரும்பாத ஸ்தாபனமாகவும், பழைய தலைவர்களின் பிடியில் உள்ளதாகவும் இவர்கள் கருதினர். இத்தலைவர்கள் வெகுஜனங்களின் அரசியல் நடவடிக்கையை விரும்பாதவர்கள், வாக்குரிமையை அவர்களுக்குக் கொடுப்பதை வெறுத்தவர்கள். தீவிரவாத இளைஞர்களில் கே. நடேச ஐயர், ஜோர்ஜ் கல்தேரா, ஜேம்ஸ் ரி. ரட்ணம், சுசன் டி. சில்வா, வலன்டைன் பெரேரா ஆகிய சிலர் குணசிங்கவின் தொழிற்கட்சியில் சேர்ந்தனர். காங்கிரஸிற்கு மாற்றான முற்போக்குப் பாதையைத் தொழிற்கட்சி காட்டுமென இவர்கள் நம்பினர். ஆனால் இவர்களில் பலர் குணசிங்கவுடன் முரண்பாடு கொண்டவர்களாய் வெளியேறினர்.

1920 க்களில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இங்கிலாந்தில் இருந்து திரும்பியதும் தீவிர அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்கும் முயற்சிகள் செய்யப்பட்டன. பழைய தலைவர்களில் இருந்து மாறுபட்ட பொருளியல் அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்த இவர்மீது சிறிதுகாலம் இளைஞர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். 1926-ல் பண்டாரநாயக்காவைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்ட முற்போக்குத் தேசியக்கட்சி பல தேசியவாதிகளையும், இளைஞர்களையும் கவர்ந்தது. பூரண சுயாட்சியைப் பெறுதலும், தேசிய உணர்வை வளர்த்து அதன்மூலம் 'ஒருசிலரின் ஏகபோகமாக இருந்த அரசியலைப் பரவலாக்குவதும்' இக்கட்சியின் நோக்கங்களாகும்.[12] தீவிர அரசியல் குழுக்களை ஒன்றிணைக்கும் இந்த முயற்சி தோல்வியடைய பண்டாரநாயக்கா தேசிய காங்கிரஸிற்குள் தொடர்ந்து இருந்து வந்தார். தொழிற்சங்க இயக்கத்தில் குணசிங்கவின் தனியாள் தலைமையின் மீதான அதிருப்தி, தொழிலாளர் மீது அவர் செலுத்திய ஆதிக்கத்தை உடைக்கும் முயற்சிக்குத் தூண்டியது. 1927-ல் கொழும்பு நகர சபைத் தேர்தலில் குணசிங்கவை எதிர்த்துப் போட்டியிட்ட பண்டாரநாயக்கா அவரைத் தோல்வியுறச் செய்தார்.

டொனமூர் ஆணைக்குழுவினர் 1927-ல் இலங்கைக்கு வந்ததும் அரசியல் நடவடிக்கைகளில் அக்கறை கூடியது. இலங்கைக்கு எந்தளவு சுயாட்சி வழங்கப்படலாம், வாக்குரிமையை எல்லாருக்கும் கொடுக்கலாமா என்பன போன்ற விடயங்கள் சூடான விவாதங்களுக்குரியவைகளாயின. அரசியல் உணர்வு மிக்க இளைஞர்கள் தேசிய காங்கிரஸ் மீதும் தொழிற்கட்சி மீதும் அவநம்பிக்கை

கொண்டிருந்தபடியால் நாட்டின் பல பாகங்களிலும் இளைஞர் முன்னணிகள் மூலம் ஒன்றிணைந்து, புதிய அரசியல் அமைப்புக்கு எதிராக எதிர்ப்பு இயக்கத்தைத் தொடங்கினர். முதலாவது வாலிபர் முன்னணி யாழ்ப்பாணத்தில் உதயமாகியது. இதைத் தொடக்கியவர்கள் ஹண்டி பேரின்பநாயகமும் சி. பாலசிங்கமும் ஆவர். கொழும்பிலும் பல இளைஞர் குழுக்கள் தோன்றி செயல் பட்டன. 1931-ல் வாலிப முன்னணிகள் யாவும் ஒன்று சேர்ந்து இளைஞர் காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கின. ஏலியன் பெரேரா என்ற வழக்கறிஞர் இதன் தலைவராகவும் வலன்ரைன் பெரேராவும் ஜோர்ஜ் கல்தேராவும் (இவர்களும் வழக்கறிஞர் களே) இதன் செயலாளர்களாகவும் இருந்தனர்.

### ஏகாதிபத்திய எதிர்ப்பு

வாலிப முன்னணிகளின் அரசியல் கண்ணோட்ட வளர்ச்சியில் இரு படிமுறைகளைக் காணமுடியும். ஒன்று தூய தேசியவாதமும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் நிலவிய காலகட்டம். இக்காலத்தில் அரசியல் விடுதலைக்காகவே இவர்கள் கிளர்ச்சி செய்தனர். இரண் டாவது காலகட்டம் வெளிநாட்டில் இருந்த சோஷலிச இளைஞர் கள் நாடு திரும்பியதுடன் தொடங்குகின்றது. இக்காலம் பொரு ளாதார மந்தகாலமாகும். இளைஞர் குழுக்கள் சோஷலிச நேரக் கும், பொருளியல் பிரச்சினைகளில் அக்கறையும் காட்டிய கால கட்டம் இது.

இளைஞர் இயக்கத்திற்கு முக்கிய தூண்டுதலாகவும் ஆதர்ஷ மாகவும் அமைந்தது இந்திய தேசிய விடுதலை இயக்கமாகும். 1920 க்களில் இந்தியாவில் சோஷலிஸ்டுகள் காங்கிரஸிற்குள் ஒரு குழுவாகச் சேர்ந்து செயற்பட்டனர். 1931 ல் காங்கிரஸின் இடதுசாரித் தலைவர்களான ஜவகர்லால் நேருவும், கமலாதேவி சட்டோபாத்யாயவும் இலங்கைக்கு வந்து இளைஞர் காங்கிரஸின் கூட்டமொன்றில் உரையாற்றினர்.

முதற் கட்டத்தில் வாலிப முன்னணிகளின் நடவடிக்கைகள் டொனமூர் ஆணைக்குழு சம்பந்தப்பட்ட அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவே அமைந்தன. 1931 மே மாதம் நடந்த கூட்டம் ஒன்றில் ஸ்ரான்லி டி சொய்சா, பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கை இளைஞர்களுக்கு நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். பிரிட்டிஷ் ஆட்சி இலங்கை மக்களின் சமூக பொரு ளாதார அரசியல் பண்பாட்டு வாழ்விற்கு பெரும் தீங்காக உள்ள

தாகவும் சுய ஆட்சிக்கான தீவிர இயக்கம் உடனடியாக தொடங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். 1931 டிசம்பர் மாதம் நடந்த இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய வலன்ரைன் பெரேரா அரைகுறைத் தீர்வுகளை ஏற்கத் தயாரில்லை என்றும் 'கலப்படமற்ற பூரண சுயாட்சி' வேண்டும் என்றும் கூறினார். டொனமூர் அரசியல் திட்டத்தை இளைஞர் காங்கிரஸ் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டனம் செய்தது. 'இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் ஒரு பின் நகர்வு' என்றும் 'எங்களது உரிமைகளை மீறுவது, தேசிய சுய கௌரவத்திற்கு இழுக்கை உண்டாக்கும் நோக்குடையது' எனவும் கண்டிக்கப்பட்டது.[13]

வாலிப முன்னணிகள் பல பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டன. இந்திய தேசிய இயக்கத்தின் நடைமுறைகளால் கவரப்பட்ட இவர்கள் 1931 யூன் மாதம், புதிய அரசியல் திட்டப்படி நடத்தப்பட்ட தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்படி கோரினர். தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடிகளின் முன்னால் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டம் செய்தனர். வாக்குப் போட வேண்டாம் என மக்களை வேண்டினர். இந்தப் பகிஷ்கரிப்பு யாழ்ப்பாணத்தில் மட்டும் வெற்றியளித்தது. காரணம் தமிழ்மக்களுக்கு புதிய அரசியல் திட்டத்தின் பால் தனிப்பட்ட எதிர்ப்பு இருந்தது. வெளிநாட்டுப் பொருட்கள் குறிப்பாக அரிசி, மதுபானம், புடவை, புகையிலை ஆகியவற்றையும் பகிஷ்கரிக்கும்படி வாலிப முன்னணி இயக்கம் நடத்தியது. சுதேசி இயக்கத்தில் சேரும்படியும் உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஆதரவு தரும்படியும் மக்களைக் கோரினர். கொழும்பு தெற்கு வாலிப முன்னணி சுதேசிப் பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் கூட்டுறவுக் கடை ஒன்றை ஆரம்பித்தது. 'ராணுவ பலத்தாலும் ஒடுக்குமுறையாலும்' ஆளப்படும் இலங்கையில் 'கையிலுள்ள ஒரே ஒரு ஆயுதம் விதேசிப் பொருட்களைப் பகிஸ்கரிப்பதும் உள்நாட்டுத் தொழில்களை விருத்தி செய்தலுமே' என்று வாலிபர் இயக்கத்தின் முன்னணி வீரர்களில் ஒருவரான ரெரன்ஸ் டி. சில்வா கூறினார். வாலிப முன்னணிகள் நடத்திய மற்றுமோர் பகிஷ்கரிப்பு இயக்கம் அரசரின் பிறந்த நாள் கொண்டாட்டமாகும். இத்தகைய நிகழ்ச்சிகள் 'இரங்கத்தக்க அடிமைப் புத்தியைக்' காட்டுவன எனவும் 'பிரித்தானியாவின் ஆளுகையையும் கட்டுப்பாட்டையும் விரும்பி ஏற்றுக்கொள்வதற்கு' சமானமானதெனவும் கூறினர்.[14]

இலங்கையின் கல்வி முறையையும் இவர்கள் கண்டித்தனர். 'சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்பியவர்கள் கையில் இது ஒரு அரசியல் கருவியாகப் பயன்பட்டது' என்ருர் ரெறன்ஸ் டி. சில்வா (இவர் கொலன்னுவை வித்தியாலயத்தை உருவாக்கியவர்). இன்றைய கல்வித் திட்டம் இலங்கையின் அரசியல் பண்பாடு பொருளாதார நலன்களுக்கு விரோதமானது என்றும் தேசிய மொழிகளில் அமையும் தேசிய கல்வித்திட்டம் வேண்டுமென்றும் ஒரு பிரேரணை 1931 ன் வாலிபர் காங்கிரஸ் மாநாட்டில் கொண்டுவரப் பட்டது. சீ. சீ. சபாரத்தினம் முன்மொழிய ரெறன்ஸ் டி சில்வா இதை வழி மொழிந்தார்.[15]

மேற்கூறியவற்ருல், தேசிய முதலாளிகளின் தலைமையிலான பலமிக்க பரந்த தேசிய இயக்கம் ஒன்று இல்லாத சூழ்நிலையில் வாலிப முன்னணியின் தீவிரவாதிகளால் தேசிய இயக்கம் எங்ஙனம் கொண்டியக்கப்பட்டதென்பது புலனுகிறது.

பொருளியல் பிரச்சினைகளும் சோஷலிசமும்

1931ம் ஆண்டு வாலிபர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய நேரு, முதலாளித்துவத்தின் இயக்கம் பற்றிய தெளிவு இல்லாமல் நடத்தப்படும் வெறும் தேசிய வாதத்தின் இயலாத் தன்மையையும் போதாக் குறையையும் வற்புறுத்தினுர். அந்தக் காலத்தில் இந்திய தேசிய காங்கிரஸில் இருந்த இடதுசாரிகள், தீவிர சமூக மாற்றங்கள் இல்லாமல அரசியல் சுதந்திரத்தால் எவ்வித பயனும் இல்லை என்று நம்பினர். சுதந்திரம் பரந்துபட்ட வெகுஜனங்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை கவனிக்கும்படியும் ஏகாதிபத்தியத்தினதும் முதலாளித்துவத்தினதும் உள்ளியல்புகளை ஆராய்ந்து அறிந்து கொள்ளும்படியும் வாலிப முன்னணியினருக்கு நேரு அறிவுரை கூறினுர். 'இலங்கையின் சாதாரண மக்களை நீங்கள் அடிமைத்தனத்திலிருந்து எப்படி மீட்பீர்கள்? சுதந்திரம் வேண்டியது தான். ஆனுல் உங்கள் நாட்டில் அடிநிலையில் உள்ள சாதாரண மனிதனை அது எப்படிப் பாதிக்கப் போகிறது?' என்ருர் நேரு. கமலாதேவி சட்டோபாத்யாய பேசும்பொழுது காந்தியின் 1930ம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டு 'காந்தி ஏகாதிபத்தியத்தின் பலாத்காரத்திற்கு எதிராக மட்டுமல்ல, ஏழைகளைச் சுரண்டிக் கொழுக்கும் முதலாளிகளின் பலாத்காரத்திற்கு எதிராகவும் தான் போராடுகிருர்' என்று கூறினுர்.[16]

வர்த்தக மந்தத்தின் காரணத்தினுலும், வேலையின்மை பெருகியதாலும் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி வாலிபர் இயக்கம் அடிக்கடி சுட்டிக்காட்டியது. இலங்கை இளைஞர்களின் நோக்கம் பற்றி 1932 ல் ரெறன்ஸ் டி சிலவா பின்வருமாறு கூறினுர். 'பணக்கார வகுப்பின் இழிந்த போலிப் பெருமை ......... சுயநல இச்சையுள்ள முதலாளிகள் வாழ்க்கை வசதிகளை தமது ஏகபோகமாக்கி அபகரித்தல் ......... இவற்றிலிருந்தும் விடுதலை, விதேசிகளின் ஆதிக்கத்திலிருந்தும் பொருளாதாரச் சுரண்டலிலிருந்தும் நாட்டை விடுவிக்கும்படி இளைஞர்களை அவர் வேண்டினுர். [17] 1932 மே மாதம் வெளிவந்த, வாலிப முன்னணியின் பத்திரிகையான Young Ceylon தனது நோக்கங்களாக பூரண விடுதலையையும் பொருளாதார ஸ்திரத்தையும் சுய ஆதாரத்தை நிலைநிறுத்தலையும் குறிப்பிட்டது. கொழும்பு தெற்கு வாலிப முன்னணி 1932 ல் 'இன்றைய பொருளாதாரப் பிரச்சினை' என்ற தலைப்பில் ஒரு சிறு நூலை வெளியிட்டது. அதன் நோக்கம் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் இரண்டும ஒன்றில் இருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளன எனக் காட்டுவதாகும். பிரிட்டனின் பொருளாதார நலன்கள் நாட்டின் செல்வங்களை வாரிச்செல்லும் என்றும் சாம்ராச்சிய சலுகைமுறை இத்தீவின் பொருளியல் உறுதிப்பாட்டிற்குக் குந்தகமானது என்றும் இந்தப் பிரசுரம் குறிப்பிட்டது. [18] தீர்வைகள், வரிகள், நிதியீட்டம் என்பனவற்றை புனரமைப்பதன் மூலம் செல்வத்தைச் சமமான முறையில் பங்கிடலாம் என வாலிப முன்னணியினர் கூறினர். 1932 ல் சோஷலிசம என்ற கோஷம் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை என்பதையும், செல்வத்தைச் சமமாகப் பங்கிடுதல் புரட்சிகர சமூக மாற்றத்தால் அன்றி நிதியீட்ட முறைகளைப் புனரமைப்பதால் அடையலாம் என்று கூறியதையும் கவனித்தல் வேண்டும். ஆனுல் அக்காலத்தில் இலங்கையில் இருந்த வாலிப முன்னணித் தலைவர்களில் சிலர் (ரெறன்ஸ் டி சிலவாவும் சுசன் டி சில்வாவும்) சோஷலிசத்தில் அக்கறை கொண்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

வெளிநாடுகளில் படித்த சோஷலிச இளைஞர்கள் நாடு திரும்பி வாலிப முன்னணியில் பங்கு கொள்ளத் தொடங்கியதும் 1932 ன் பிற்பகுதியிலும் 1933 லும் வாலிப முன்னணி அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. கம்யூனிசம் பற்றியும், சோவியத் யூனியனின் அனுபவங்கள் பற்றியும் சாதகமான குறிப்புகள் முதல் தடவையாகக் கூறப்பட்டன. கொழும்பு தெற்கு வாலிப முன்னணியின் உறுப்பினராகச் சேர்ந்திருந்த கொல்வின்

ஆர். டி. சில்வா, 1932ல் நம்மால் பின்பற்றப்படவேண்டிய புதிய தத்துவம் கம்யூனிசமாகும் என்று தெரிவிக்கும் கட்டுரையொன்றை 'யங் சிலோன்' சஞ்சிகையில் எழுதினுர். இதே இதழில் ரொபின் ரட்ணம் ஒரு கட்டுரை எழுதினுர். இவர் கனடாவில் கல்வி கற்று நாடு திரும்பி வாலிப முன்னணி உறுப்பினராய் இருந்தார். இவரது கட்டுரையில் சோவியத் ரஷ்யாவின் மிகப்பெரிய சமூகப் பரிசோதனையிலிருந்து உலக நாடுகள் பொருளாதாரத் திட்டமிடலின்' அவசியத்தைக் கற்றுக் கொண்டுள்ளன என்றும் இலங்கை இளைஞர்கள் ஒரு புதிய சமூக அமைப்பை உருவாக்குவர் என்பதில் ஐயமில்லை என்றும் குறிப்பிட்டார்.[19] 1932ன் பிற்பகுதி முதல் 'யங் சிலோன்' சஞ்சிகையில் மார்க்ஸ், லெனின் பற்றிய குறிப்புக்கள் அதிகளவு காணப்பட்டன. 'பாட்டாளி வர்க்கப் புரட்சியில் "மிகப்பெரிய பங்கை வகித்த லெனினுடைய சொற்பொழிவுகளுக்கு இணையான சொற்பொழிவுகள் அண்மைக்காலத்தில் தோன்றவில்லை' என்று ஒரு மதிப்புரையில் எழுதப்பட்டது. 'சோஷலிசமும் போரும்' என்ற புத்தக மதிப்புரையில் அந்தப் புத்தகம் லெனினின் 'மதிநுட்பத்தையும் அறிவையும் தெளிவையும்' காட்டுகிறது எனக் கூறப்பட்டது.[20]

லங்கா சம சமாஜக் கட்சி தோன்றுவதற்கு முன் உள்ள ஆண்டுகளில் வாலிபர் இயக்கம் நான்கு வழிகளில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தியது. அவையாவன:

1. வாலிப முன்னணிகள் புதிய சோஷலிசத் தலைமையின் கீழ் பொப்பி மலர் விற்பனை எதிர்ப்பு இயக்கத்தை நடத்தின. இது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரத்திற்கு மேடையாக அமைந்தது.

2. 1934 - 35 காலத்தில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவியது. சோஷலிஸ்டுகள் மலேரியா தடுப்பு இயக்கத்தில் சேர்ந்து மக்கள் துயர் போக்கினர்.

3. கொழும்பில் நெசவுத் தொழிற்சாலை ஒன்றில் 1933 ல் இவர்கள் வேலை நிறுத்தம் ஒன்றை நடத்தி தொழிற்சங்க இயக்க நடைமுறையில் பயன்மிகு அனுபவத்தைப் பெற்றனர்.

4. 1931 - 1936 வரை சட்டசபையில் தமது பிரதிநிதியாக ஒருவரை அனுப்பியதன் மூலம் பாராளுமன்ற அரசியலில் இளம் சோஷலிஸ்டுகள் பிரவேசித்தனர்.

வாலிப முன்னணிகளை தேசியவாத அரசியல் நடவடிக்கையில் பிரபலமாக்க உதவிய பிரச்சினைகளில் ஒன்று பொப்பி தின எதிர்ப்பு இயக்கமாகும். இவ்வியக்கம் 1926-ல் தீவிரவாத மாண வர்கள் சிலரால் தொடக்கப்பட்டது. 1931-ல் இலங்கை முன் னுள் படைவீரர் சங்கத்தாலும் வாலிப முன்னணிகளாலும் இவ் வியக்கம் தொடரப்பட்டது 1933-ல் கொழும்பு மத்தி வாலிப முன்னணி இவ்வியக்கத்தை முன்னின்று நடத்தும் பொறுப்பை ஏற்றதும் இவ்வியக்கம் தீவிர பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கம் என்று தெளிவாகத் தன்னை வெளிக்காட்டியது.

வருடா வருடம் நவம்பர் 11ம் திகதியை (முதல் யுத்தம் முடி வடைந்த தினத்தைக் கொண்டாடும் வகையில்) போர் நிறுத்த நாளாக (பொப்பி தினம்) 1920 க்களில் இலங்கையில் கொண் டாடி வந்தனர். இலங்கயில் இருந்த பிரிட்டிஷ் பிரஜைகளும் அர சாங்க உத்தியோகத்தர்களும் இதில் பெரிதும் அக்கறை காட்டி னர். அத்தினத்தில் பொப்பி மலர் விற்பனை மூலம் முன்னுள் படை வீரர்களுக்காக நிதி சேகரிக்கப்பட்டது; ராணுவ அணிவகுப்புகள் நடத்தப்பட்டன. கோவில்களில் ஆராதனைகள் செய்யப்பட்டன; பகட்டான விழாக்கள் நடத்தப்பட்டன. இவை பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்தின் மீது பற்றுதலை வளர்க்கும் வகையில் செய்யப்பட்டன. பொப்பி தின விழாக்களும் இனப் பெருமையின் வெளிப்பாடும் இலங்கைத் தேசியவாதிகளிடையே மனக்குமுறலை உண்டுபண்ணின. பொப்பி நிதிக்காக இலங்கையில் இருந்து பெருந்தொகைப் பணம் வெளியேறுவதை இவர்கள் கண்டித்தனர்.

1926-ல் ஜேம்ஸ் ரட்ணம் பத்திரிகைக்கு எழுதிய கடிதம் ஒன் றில், இலங்கை ஒரு வறிய நாடாக இருக்கும் வேளையில் தனது வருவாய்க்கு ஏற்றதல்லாத வகையில் பெருந் தொகைப் பணத்தை பொப்பி நிதியாக வெளியே அனுப்புகிறது என்றும் இந்தப் பணத் தின் மிகச் சிறிய பங்குதான் இலங்கையரான முன்னுள் படைவீர ருக்குப் போய்ச் சேருகிறது என்றும் முறையிட்டார். 1926-ல் கொழும்பு நகரத்தில் இருந்த இளைஞர்கள் சிலர் (ஹரி குணவர்த் தன, டி. என். டபிள்யூ. டி. சில்வா, வலன்டைன் பெரேரா, சி. பொன்னம்பலம், ஜேம்ஸ் ரட்ணம்) பொப்பி தினத்தை எதிர்த்து பொதுக் கூட்டம் ஒன்றையும் ஆர்ப்பாட்டத்தையும் ஒழுங்கு செய் தனர். இவர்கள் தேசியவாதிகளாய் இருந்தனர்; சிலர் குணசிங்க

வின் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள். பின்னர் வாலிப முன்னணிகளின் முக்கிய உறுப்பினர்களாக ஆனவர்கள்.

1931 ல் பொப்பி தின நிதி சேகரிப்புக்கு எதிராக இலங்கையின் மலர் ஒன்றின் பெயரைக் கொண்டு 'சூரிய மல்' இயக்கம் ஆரம்பித்ததும் இந்த இயக்கம் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. இதைத் தொடங்கியவர் ஏலியன் பெரேரா ஆவர். இவர் இலங்கை முன்னாள் படைவீரர் சங்கத் தலைவராகவும், முன்னாள் படைவீரர்களில் ஒருவராகவும் இருந்த அதேவேளை வாலிப காங்கிரஸின் தலைவராகவும் இருந்தார். சூரிய மல் நிதி இலங்கை முன்னாள் படை வீரர்களுக்கு உதவுவதற்காகவும் வேறு தர்ம நோக்கங்களுக்காகவும் சேகரிக்கப்பட்டது. முன்னாள் படை வீரர்களான இலங்கையர் பலர் அங்கவீனர்களாகவும், வறுமையில் வாடுபவர்களாகவும் உதவிவேண்டி உள்ள நிலையை பெரேரா விளக்கினார். 'போர் நிறுத்த நாளில் சூரிய மல் விற்றல் முறை கேடானது என்ற எண்ணம் நிலவுகிறது' என்று எழுதிய பெரேரா போர் நிறுத்த நாள் படைவீரர்களுக்கு முக்கியம் மிக்க நாள் ஆனபடியால் தான் அத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டது என விளக்கினார்.[21] வாலிப முன்னணியினர் சூரிய மல் இயக்கத்தை மிகுந்த உற்சாகத்துடன் நடத்தினர். இதை பிரிட்டிஷ் எதிர்ப்பு உணர்ச்சியை வெளியிடத் தகுந்த சந்தர்ப்பமாகப் பயன்படுத்தினர்.

பொப்பி தினத்தில் சூரியமல் விற்றமை, 1931 ம் ஆண்டில் கொழும்பிலும் பிற நகரங்களிலும் பரபரப்பை ஏற்படுத்தியது. எங்கும் விற்பனை நன்முக நடந்தது. குறிப்பாக கொழும்பில் தொழிலாள வகுப்பினர் வாழும் பகுதிகளில் பொப்பி பூவை விட சூரிய மல் தான் அமோகமாக விலைப்பட்டது. நடைபாதைகளில் காணப்பட்டோர் சூரிய மலரையே சூடியிருந்தனர். ஆனால் பெரும்பாலான கார்களில் பொப்பிப் பூக்கள் காணப்பட்டன என பத்திரிகைச் செய்தியொன்று வந்தது. கொழும்பின் பிரபல கிறிஸ்தவ கல்லூரிகள், சூரிய மலர் விற்பனையாளர்கள் கல்லூரி வளவிற்குள் நுழைய விடாமல் தடைசெய்தன. சில பிரிட்டிஷ் தொழில் நிறுவனங்களில் வேலைக்கு வரும் தொழிலாளர்கள் சூரிய மல் சூடிக் கொள்ளக்கூடாது என எச்சரிக்கை விடுத்தன.[22]

'சூரிய மல் இயக்கத்தின் அரசியல் தன்மையையும்' அதனால் எழுந்த எதிர்ப்பையும் கண்டதும், இவ்வியக்கத்தை தொடக்கியவர்களான இலங்கை முன்னாள் படைவீரர் சங்கத்தினர் பயந்து விட்டனர். இச்சங்கம் இயக்கத்தை கைவிடுவதென 1932 ல் தீர்

மானித்தது. சோஷலிஸ்டுகளுக்கு இது நல்லதொரு சந்தர்ப்ப மானது. கொழும்பு மத்தி வாலிபர் முன்னணி சூரிய மல் இயக் கத்தைப் பொறுப்பேற்றது. இதை நடத்துவதற்கு டொரின் விக்கிரமசிங்கவைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. டொரின் விக்கிரமசிங்க ஆனந்தா பெண்கள் கல்லூரியின் தலைமை ஆசிரியராவர்.[23] இந்தக் குழுவில் வெளி நாடுகளிலிருந்து திரும்பிய சோஷலிஸ்டுகளும் வாலிப முன்னணி களின் தீவிர உறுப்பினர்களும் இடம் பெற்றனர். இந்த இயக் கம் வேறு பல தேசியவாதிகளையும் கவர்ந்தது. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களில் ஒருவர். சூரியமல் நிதிக்கு அவர் பொறுப்பாளராக இருந்தார். வில்மட் பெரேரா தமது பாடசாலையில் (ஹொரண சிறிபாலி வித்தியாலயம்) சூரிய மல் கூட்டங்களை நடத்தினர். சூரிய மல் இயக்கத்தில் பங்கு பற்றிய தன் விளைவாகப் பல இளைஞர்கள் அரசியல் துறைக்கு வந்து சேர்ந்தனர். சேர்க்கப்பட்ட நிதி தாழ்த்தப்பட்ட சமூகப் பிள்ளை களின் கல்விக்காகவும் நூல்களைப் பிரசுரிக்கவும் உபயோகிக்கப் பட்டது. ஆனந்தா பெண்கள் பாடசாலையின் அதிபருடைய இல்லம் இயக்கத்தின் தலைமையகம் போல் அமைந்தது. ஒவ்வொரு வருடமும் கல்லூரியின் உற்சாகம் மிக்க ஆசிரியைகளால் பெரும் தொகையான சூரிய மல் பூக்கள் செய்து விற்கப்பட்டன. இவ் வாசிரியைகளுள் ஹெலன் டி அல்விஸ், எவா டி மெல், வயலட் கமகே, லிலியன் பண்டாரநாயக்க, வினிபெரட் சில்வா ஆகியோர் அடங்குவர்.

முன்னாள் படைவீரர்களின் பெயரில் தொடங்கிய சூரிய மல் இயக்கம், அங்கவீனர்களான படைவீரர்கள் பற்றிக் குறிப்பிடு வதை விட்டு வெளிப்படையாக பிரிட்டிஷ் எதிர்ப்புத் தன்மை யைக் காட்டியது. இதனால் அதிகார வகுப்பினர் மத்தியிலும் இலங்கையில் இருந்த பிரிட்டிஷ்காரர்களிடையிலும் இவ்வியக்கத் தின்மீது கோபமும் வெறுப்பும் உண்டாக ஏதுவாயிற்று. சூரிய மல் இயக்கத்தினர் பண்பு தெரியாதவர்கள் எனவும் இங்கிதமற்றதும் கேவலமானதுமான ஒரு செயலில் இறங்கியுள்ளார்களெனவும் குற்றம் சாட்டப்பட்டனர்.[24]

பூரியமல் இயக்கத்தில் சேர்ந்த வாலிப முன்னணியினரால் புதிய அரசியல் சுலோகங்கள் பல புகுத்தப்பட்டன. 'போர்க்கா லத்தில் பிரிட்டன் எங்களுக்காகத்தான போரிட்டது என்பதும் சமாதானகாலத்தில் எங்களுக்காக எவை எவற்றைச் செய்திருக்கி றார்கள் என்பதும் தெரியவில்லை' என்று லெஸ்லி குணவர்த்தன

1933 ல் எழுதினர். இந்த இயக்கம் 'வெளிப்படையாக போர் எதிர்ப்பு'க் கொள்கையுடையது எனவும் நாட்டில் இருந்து பணம் வெளியேறுவதன் மூலம் 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உலகைத் துண்டு போடுவதற்காக வேலும் பல போர்களை செய்வதற்கு' உதவக் கூடாதென்றும் ரெறன்ஸ் டி சில்வா எழுதினர். ரெறன்ஸ் டி சில்வா எழுதிய 'சூரிய மல் வேண்டுமா? அல்லது பொப்பி வேண்டுமா?' என்ற நூலில் தான் முதல் முதலாக சோஷலிசம் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. 'இந்தப் போரில் ஒன்றிணைந்து சோஷலிச. ஜனநாயக இலங்கையை உருவாக்க' உதவும் படி அவர் வேண்டுகோள் விடுத்தார்.[25]

தொழிற் சங்க நடவடிக்கை

ல. ச. ச. கட்சியை உருவாக்குவதற்கு முந்திய ஆண்டுகளில் இளைஞர்கள் தொழிற் சங்கக் கிளர்ச்சி நடவடிக்கைகளில் அனுபவம் பெற்றிருந்தார்கள். 1933.ல் வெள்ளவத்தை நெசவு ஆலை வேலை நிறுத்தத்திற்குத் தலைமை தாங்குவதன் மூலம் இது சாத்தியமாயிற்று. இலங்கைத் தொழிலாள வர்க்க சரித்திரத்தில் இது ஒரு திருப்பு மையமாகும். ஏனெனில் பொருளாதார மந்தத்தின் ஆரம்பத்துடன் ஏ. ஈ. குணசிங்கவின் தொழிற் சங்கம் தீவிரக் கொள்கையைக் கைவிட்டது. இந்தச் சங்கத்திற்குச் சரியான ஒரு சவாலாக அமைந்தவர்கள் வாலிப முன்னணியில் இருந்த தீவிரவாதிகளேயாவர்.

வெள்ளவத்தை நெசவாலையின் உரிமையாளர்கள் இந்தியராவர். 1890-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலை அன்று இருந்த நெசவாலைகளில் மிகப் பெரியது. 1400 தொழிலாளர்கள் இங்கு வேலை செய்தார்கள். குணசிங்கவின் தலைமையில் 19ʒ3, 1926, 1929 ஆகிய ஆண்டுகளில் இங்கு வேலைநிறுத்தங்கள் நடந்தன. பொருளாதர மந்தம், சந்தையில் வந்து குவிந்த ஜப்பானியத் துணிகளின் போட்டி ஆகியவற்றைக் காரணமாகக் கொண்டு சம்பளக் குறைப்பை ஆலை நிர்வாகம் 1933 பெப்ரவரியில் அறிவித்தது. இதன் விளைவாக முழுத்தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். பழைய, ஊறிப்போன தலைவர்கள் சிலரின் தூண்டுதலால் தான் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டதாக நிர்வாகம் கூறியது. தொழிலாளர்கள் தொழில் அமைச்சருக்கு ஒரு முறையீட்டை அனுப்பி வைத்ததோடு தமது சார்பில் இவ்விடயத்தில் தலையிட்டு உதவும்படி குணசிங்கவை வேண்டினர். குணசிங்க தொழிலாளர்களை வேலைக்குத் திரும்புமாறும் தகுந்த முன்னறிவித்

தல் இல்லாமல் வேலை நிறுத்தம் செய்தது தொழிற் சங்கத்திற்கும் முதலாளிகள் சமாஜத்திற்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தத்தை மீறிய செயலாகும் என்றும் புத்திமதி கூறினர். மேலும் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர்க்கு தொழிற் சங்க அங்கத்துவம் காலாவதியாகிவிட்டதையும் சுட்டிக் காட்டினர். குணசிங்கவின் செயல் தொழிலாளர்கள் எதிர்பாராத ஒன்று.

தொழிலாளர்கள் எச். சிறீ. நிசங்கா என்ற வழக்குரைஞரிடம் (இவர் வாலிப முன்னணி உறுப்பினராயிருந்தவர்) முறையிட்டனர். இவர் ஆலைக்கு எதிரே இருந்த வீட்டில் வசித்தார். அவர் கொல்வின் ஆர். டி. சில்வாவிடம் போய் இந்த விடயத்தைச் சொல்லும்படி தொழிலாளர்களுக்குக் கூறினர். சில்வா அப்போது தான் பிரிட்டனில் இருந்து நாடு திரும்பியிருந்தார். சில்வாவும் கொழும்பு தெற்கு வாலிப முன்னணியை சேர்ந்த உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினையில் தலையிட முன்வந்தனர். பெப்ரவரி 23-ம் திகதி நடந்த பெரிய கூட்டம் ஒன்றில் வெள்ளவத்தை தொழிலாளர் சங்கம் ஆரம்பமானது. கொல்வின் ஆர். டி. சில்வா அதன் தலைவராகவும் வாலிப முன்னணியின் தீவிர உறுப்பினர்களான வேர்ணன் குணசேகரா, ஜே. டயிள்யூ. சேனநாயக்கா ஆகியோர் செயலாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பிலிப் குணவர்த்தன, என். எம். பெரேரா, எஸ். ஏ. விக்கிரமசிங்கா, றுபேர்ட் குணவர்த்தன, சுசன் டி சில்வா ஆகியோரும் அப்புகாமி, குட்டன், ராமையா ஆகிய தீவிரமிக்க தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்தல், கூட்டங்களில் சொற்பொழிவு நிகழ்தல், நிதி சேகரித்தல், நிவாரண உதவிகளை வழங்கல் ஆகிய பணிகளில் முன்நின்று செயல்பட்டனர்.

வேலை நிறுத்தம் இரு மாதங்கள் தொடர்ந்தது. இக் காலத்தில், முதலாளிகளோ அல்லது அரசாங்கமோ புதிய தொழிற் சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்கிவிடக்கூடாது என்ற ஒரே நோக்குடன் குணசிங்க செயல்பட்டார். புதிய தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கத் தாம் தயாரில்லை என்றும் குணசிங்க தான் தொழிலாளர்களின் மதிப்புமிக்க பிரதிநிதியென தன்னால் ஏற்கமுடியும் என்றும் ஆலையின் முகாமையாளர் அறிவித்தார். குணசிங்க வாலிப முன்னணியைத் தாக்கிப்பேசினர். ஒன்றிணைந்த தொழிலாளர் இயக்கத்தை சீர்குலைக்கும் கெட்ட எண்ணம் உள்ள ஒரு அரசியல் இயக்கம் என வாலிப முன்னணிபற்றி கூறினர். இதன் தலையீட்டை அனுமதித்ததன் மூலம் தொழில் கட்டுப்பாட்டாளர் தொழில் துறையில் அராஜகம் தோன்றுவ

தற்கு இடம் தந்துவிட்டார் என்றார் குணசிங்க. புதிய தொழிற் சங்கத்தின் தலைவர்கள் 'ரஷ்யாவில் இருந்தும், அமெரிக்காவில் இருந்தும் விசித்திரமான கருத்துக்களை' கொண்டு வந்திருக்கிறார் களென்றும் 'இலங்கைத் தொழிலாளர் வாழ்வில் அராஜக முறை களை' புகுத்த முனைகிறார்கள் என்றும் கூறினார்.[26]

ஆலை வேலைநிறுத்த விடயத்தில் இனவாதத்தைப் புகுத்திய தால் சிக்கல் மேலும் மோசமடைந்தது. ஆலைத்தொழிலாளர்க ளில் மூன்றில் இரண்டு பங்கினர் மலையாளிகளாயும் மூன்றில் ஒரு பங்கினர் சிங்களவராயும் இருந்தமையால் குணசிங்க மலை யாளி எதிர்ப்பு உணர்ச்சியைக் கிளப்பினார். பொருளாதார மந் தம் காரணமாக வேலையின்மை அதிகரித்திருந்தமையால் கொழும்பு நகரில் மலையாளிகளுக்கு எதிரான உணர்வு இருந்தது. 'துர் நோக்கமுள்ளதும், பொறுப்பற்றதுமான தனது நடைமுறைகள் மூலமும் பழிச் சொல்லும் அவதூறும் நிறைந்த துர்ப்பிரசாரம் மூல மும், இந்தப் பிரச்சினைக்குள் இனபேதத்தையும் குரோதத்தை யும் கொண்டுவர முயற்சிக்கிறார்' என புதிய தொழிற் சங்கத் தின் செயலாளர் குணசிங்கவைக் கண்டித்தார். சிங்களவர்களை கருங்காலிகளாக ஆலையில் வேலைக்கு அமர்த்த குணசிங்க முயற் சிக்கவே நிலைமை சிக்கலானது. குணசிங்க துறைமுகத் தொழி லாளர்களை லொறிகளில் ஏற்றித் தொழிற்சாலைக்கு அனுப்பி வைத்தார். வேலைக்குத் திரும்ப விரும்பும் வேலைநிறுத்தக்காரர் களுக்குப் பாதுகாப்பு அளிப்பதே இதன் நோக்கம் என்று அவர் சொன்னார், பொலிசார் கூற்றுப்படி 'வேண்டுமென்றே காடை யர்களைக் கூட்டி வந்து மலையாளிகளுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே மோதல்களை உண்டாக்கி 'அபாயகரமான நிலையை' குணசிங்க உருவாக்கினார்.[27]

இனப்பகை மூண்டிருந்ததைக் கண்ட தொழில் அமைச்சர் 'ஏற்கனவே நடந்த அசம்பாவிதங்களும், இனச் சண்டை மூளக் கூடிய ஆபத்தும் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை' என்று கவர்னருக்கு அனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்டார்.[28] இதனால் அரசாங்கம் இவ்விடயத்தில் தலையிட முடிவு செய்தது. 1931-ம் ஆண்டின் தொழிற் தகராறுச் சட்டத்தின் படி இத்தக ராறைத் தீர்த்து வைப்பதற்காக அரசாங்கம் ஒரு ஆணைக் குழுவை நியமித்தது.

ஒரு தொழிற் தகராறைத் தீர்ப்பதற்கு மேற்குறித்த சட்டத் தின் படியான இந்த நடவடிக்கையை மேற்கொண்டது இதுவே

முதல் தடவையாகும். ஆணைக்குழு தனது அறிக்கையில், முதலில் சமரச பேச்சு வார்த்தைகளை நடத்தாமல் வேலைநிறுத்தத்தில் இறங்கியதற்காக தொழிலாளரைக் கண்டித்தது. அத்தோடு வேலைக்குத் திரும்புமாறு தொழிலாளரைத் தூண்டியதற்காக குணசிங்கவைப் பாராட்டியது. வெள்ளவத்தை ஆலை நிர்வாகத்தின் பண நெருக்கடிக்கு நிவாரணம் வேண்டியது தான் என்றும் 'இந்த நிவாரணத்திற்கு சம்பளக்குறைப்பும் ஓரளவில் உதவவேண்டும்' என்றும் ஆணைக்குழு அங்கீகாரம் கொடுத்தது. ஆனால் சம்பளக் குறைப்பு 12% ற்கு மேற்படக்கூடாது என ஆணைக்குழு கூறியது. இந்த வீதம் சம்பளம் குறைத்தல், மந்தகாலத்தின் விலை வீழ்ச்சிகளிற்குச் சமானம் ஆகும் என்றனர். வேலை நேரத்தை 60 மணியில் இருந்து 54 ஆகக் குறைக்கவேண்டும் என்ற கோரிக்கை நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும், இந்தியாவில் உள்ள ஆலைகளும் 60 மணி நேர வேலை வாங்குவதாகவும் கூறினர். அக்காலத்தின் நிதி நெருக்கடி காரணமாக தொழிலாளர்களின் ஏனைய கோரிக்கைகளை வழங்குதல் இயலாது எனக் குறிப்பிட்டனர்.[29]

ஆணைக்குழுன் அறிக்கைக்குக் குணசிங்க ஆதரவு தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியைக் கொண்டாடும் முகமாக ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்காக தான் பெற்றுக்கொடுத்த உரிமைகளை விபரித்து குணசிங்க இக் கூட்டத்தில் பேசினார். வெள்ளவத்தை தொழிலாளர் சங்கத்தின் தலைவரான கொல்வின் ஆர். டி. சில்வா தொழிலாளர்கள் இவ்வறிக்கையைக் குணசிங்க போல வரவேற்றுத் துதி பாடவில்லை என்றும் இவ்வறிக்கை நீதி நியாயமற்றதென்றும் கூறினார். சம்பளம் பற்றிக் கூறுகையில் 'வாழ்க்கைச் செலவுடன் சம்பளம் ஒரே சீராக கட்டாயம் மாறவேண்டும் என்னும் கொள்கையை நாம் ஏற்கமுடியாது. தற்போது உள்ள சம்பள விகிதம் நியாயமானது என்ற முட்டாள் தனமான முடிவில் தான் இந்த கொள்கை அமைகிறது' என்றார் கொல்வின்.[30]

குணசிங்கவின் தொழிற் சங்கத்திற்கு சவாலாக தீவிரவாத தொழிற் சங்கமொன்று தோன்றியதையிட்டு அரசாங்கம் கவலை கொண்டது. ஏனெனில் இக்காலத்தில் குணசிங்கவின் சங்கம் அரசாங்கத்திற்கும் முதலாளிகளுக்கும் ஏற்புடைய ஒன்றாக மாறி விட்டது. 'ஆலையின் முகாமையாளர் மிகவும் சங்கடமான நிலையில் இருக்கிறார். ......... ஏனெனில் ஒரு தொழிற் சங்கத்துடன் அல்ல, அரசியல் ஸ்தாபனத்துடன் மல்லுக்கட்ட வேண்டியதாய் இருக்கிறது' என்று தொழில் கட்டுப்பாட்டாளர் கூறினார்.[31]

முந்திய காலப்பகுதியின் தொழிலாளர் தலைவர்கள் போல் 1930 க்களின் இளம் தீவிரவாதிகளும் பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். இதனால் வறுமை, மக்களை வாட்டும் நோய்கள் பற்றிய பிரச்சினைகளில் அவர்கள் பரிச்சயம் கொண்டனர். 1934 - 35-ம் ஆண்டுகளில் மலேரியா பரவுவதற்கு முன்னர் தொடர்ந்து இரு பருவங்கள் கடும் வரட்சியும் பயிரழிவும் ஏற்பட்டன. 'பொருளியல் மந்தத்தால் ஏற்கனவே உணவின்றிச் சக்தியிழந்து போன மக்கள் மலேரியாவால் கொல்லப்படுவதற்குத் தயார் நிலையில்' இருந்ததாக ஒரு உத்தியோகபூர்வ அறிக்கை கூறியது[32]. மலேரியா தாக்கிய பகுதிகளின் 30 லட்சம் மக்களில் (அப்போதைய இலங்கையின் முழுச்சனத்தொகை 55 லட்சம்) 15 லட்சம் பேர் 1935 அளவில் நோய்க்கு ஆளாகினர் என்றும், 1934 செப்டம்பருக்கும் 1935 டிசம்பருக்கும் இடையில் ஒரு லட்சம் பேர் இறந்தனர் என்றும் உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் கூறுகின்றன.

நோய் கடுமையாகப் பரவ, இலங்கையின் சில மாவட்டங்களில் பஞ்சநிலை தோன்றியது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசாங்க, தனியார் ஸ்தாபனங்களால் நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அரசாங்கம் நிவாரண வேலைக்காக ஒரு ஆணையாளரை நியமித்தது. 5 லட்சம் ரூபா பணத்தை ஒதுக்கியதோடு மலேரியா நிவாரணநிதி ஒன்றையும் ஆரம்பித்தது. இந்நிதிக்கு ஒரு லட்சம் ரூபாவரை சேர்ந்தது. உணவு, உடை, மருந்துகள் வழங்கவும் நிவாரண வேலைகளுக்காகவும் பணம் செலவிடப்பட்டது. பல ஸ்தாபனங்களையும் சேர்ந்த தொண்டர்கள் பொருட்களைச் சேகரிப்பதிலும் வீடுவீடாகச் சென்று விநியோகிப்பதிலும் உதவினர்.

கேகாலை மாவட்டத்தில் நிதி சேகரிப்பதில் சூரியமல் இயக்கம் பெரும்பங்கு கொண்டது. ஒரு வைத்திய சாலையும் இங்கு திறக்கப்பட்டது. டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, கொல்வின் ஆர். டி. சில்வா, ஹரி, பிலிப், குணவர்த்தன சகோதரர்கள், என். எம். பெரேரா, ஞெபின் ரட்ணம், டாக்டர் மேரி ரட்ணம், செலினா பீரிஸ், ஆனந்தா பெண்கள் கல்லூரியின் ஆசிரியர்கள் சிலர் ஆகியோர் பல மாதங்களாக இப்பகுதியில் வேலைகளில் ஈடுபட்டனர். பொறலகொட மூலகாமியின் (பிலிப் குணவர்த்தனவின் தந்தை) வீடு, சூரியமல் தொண்டர்களின் தலைமையகமாக அமைந்தது. நிவாரண ஆணையாளர் தமது அறிக்கையில் சூரிய

மல் தொண்டர்களின் புத்திசாதுரியமான, திட்டமிட்ட முறையி லமைந்த நடைமுறைகள் பற்றியும் பாராட்டக்கூடிய சேவை பற்றியும் குறிப்பிட்டார்.[33]

வாலிய முன்னணியும், சூரியமல் இயக்கத்தினரும் மலேரியா விளைத்த அழிவிற்கான முழுப் பொறுப்பும் அரச நிர்வாகத்தைச் சார்ந்தது என்றனர். இலங்கையின் மிகப்பெரிய அழிவான இது 'அரசின் அசட்டையினதும், அக்கறையின்மையினதும் விளைவு' எனக் கண்டிக்கப்பட்டது. பொருளாதார மந்தம், வரட்சி, நோய் பரவல் ஆகிய அபாயமான சூழலில், சட்டசபையானது நாட்டின் விவசாய மக்களை முற்றுகப் புறக்கணித்ததாக குற்றம் கூறப்பட்டது. 'கிராமங்களின் புனருத்தாரணத்திற்கும் விவசாயிகள் நிலை மேம்படவுமான' ஒரு கொள்கையை முன்வைக்கவில்லை என இலங்கைத் தேசிய காங்கிரஸ் கண்டிக்கப்பட்டது. சட்டசபையின் தலைவராக இருந்த டி. பி. ஜயதிலக மலேரியா நோய் மக்கள் செய்த கர்மவினைப்பயன் என்றுராம். இதற்காக இளைஞர்கள் அவரைக் காரசாரமாகக் கண்டித்தனர். 'மலேரியா நோய் பரவலின் அரசியல் விளைவுகளைத்' தட்டிக்கழிக்க அவர் முயல்கிறுர் என்றும் நாடு சுடலைக்காடாக மாறும் வேளையில் 1935-ன் அரச வைபவ கொண்டாட்டங்களில் வரியிறுப்பாளர்களின் பணத்தை விரயமாக்கிஞர் என்றும் கண்டிக்கப்பட்டார்.[34] தேசியத் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அரசவைப் பிரபுக்களை வரவேற்று உபசரிப்பதிலும், அரச வைபவங்களைக் கொண்டாடுவதிலும், பிரபுப் பட்டத்திற்காக அலைவதிலும், நிலவரியை நீக்குவதன் மூலம் பணக்காரர்களின் வரிப்பளுவைக் குறைப்பதிலும்' ஈடுபட்டார்கள் என கொல்வின் கூறினுர்.[35] இலங்கைத் தொழிற்கட்சி, ஏழைகளினதும், தொழிலாளர்களதும் தேவைகள் பற்றிய பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் கடமையில் இருந்து தவறிவிட்டது' எனக் கண்டிக்கப்பட்டது. கட்சியின் சக்தி அரசியல் சாகசங்களில் விரயம் செய்யப்பட்டதோடு தொழிலாளர் நிலையை மேம்படுத்துவதல்ல அவர்களைச் சூறையாடுவதே நோக்கமாக இருந்தது என்று கூறினர்.[36]

வாலிப முன்னணியினரின் பத்திரிகையாகிய 'யங் சிலோன்' சூரிய மல் இயக்கம் மலேரியா தடுப்பு வேலையில் ஆற்றிய பங்கை பாராட்டி எழுதியது. நிவாரணம் என்ற சொல்லுக்குப் புதிய அர்த்தத்தை இளைஞர்கள் கொடுத்துவிட்டார்கள் என்று அது எழுதியது.[37] சூரிய மல் இயக்கத்தின் மலேரியா நிவாரணக் குழு தனது அறிக்கையில், செய்யப்பட்ட நிவாரண வேலையை விட அதன் அரசியல், முக்கியத்துவம் பிரதானமானது எனக் கூறியது.

மருத்துவ உதவியாகவும் பொருள் உதவியாகவும் செய்த உதவி களை விட சூரியமல் தொண்டர்கள் மக்களுடன் ஏற்படுத்திய ஆத் மார்த்த தொடர்பு மேலானது என அவ்வறிக்கை கூறியது.

"நிலப்பிரபுத்துவத்தின் உண்மையான நிலையையும், அதன் ஒடுக்குமுறையின் அளவையும் தன்மையையும், அந்த அமைப் பில் நிலவும் துன்பம், பற்றுக்குறை, ஆத்மார்த்தச் சீரழிவு ஆகியவற்றையும் இன்று போல் நாம் தெளிவாகக் கண்டு ணர்ந்தது கிடையாது................ கிராமத்தவனை எமக்குச் சமதையானவனுக அனுதாபத்தோடு நாம் நடத்தியது அவ னிடம் ஓர் விழிப்புணர்வை உண்டாக்கிவிட்டது. அவனது மேலாளர்களால் அதிகாரம் செய்யப்பட்டும், தூற்றப்பட்டும், நாய்க்குச் சமானமாக நடத்தப்பட்டுமே அவன் பழக்கப்பட் டிருந்தான்.[38]

இலங்கைத் தேசிய காங்கிரசையும், இலங்கைத் தொழிற் கட்சியையும் மக்களின் உடனடிப் பொருளாதாரத் தேவைகளையும், சமூக மாற்றத்தின் அவசியத்தையும் கவனத்தில் கொள்ளாமைக் காகக் கண்டனம் செய்த வாலிப முன்னணியினர், தீவிரவாத, தேசிய அரசியல் கட்சி ஒன்றை நாட்டில் தோற்றுவிக்க வேண்டி யதன் அவசியத்தை உணர்ந்தனர்.

### சட்ட சபையில் புரட்சிக்குரல்

ல. ச. ச. கட்சியைத் தோற்றுவிப்பதற்கு முந்திய ஆண்டுக ளில் பாராளுமன்ற அரசியலிலும் வாலிப முன்னணியினருக்கு அனுபவம் கிட்டியது. ஒரு பிரிவினர் தேர்தல்களில் போட்டியிடு வதை எதிர்த்துப் பகிஷ்கரிப்புச் செய்த போதும் (குறிப்பாக யாழ்ப் பாணம்) இன்னொரு பிரிவு, பாராளுமன்றம் பிரசாரத்திற்கும் கிளர்ச்சிக்கும் சிறந்ததொரு அரங்கமாகும் எனக் கருதியது. சூரிய மல் இயக்கம், மலேரியா நிவாரண வேலை, வெள்ளவத்தை வேலை நிறுத்தம் ஆகியவற்றில் ஊக்கத்தோடு உழைத்தவரான எஸ். ஏ. விக்கிரமசிங்க 1931 தேர்தலில் மொரவாக்க தொகுதியிலிருந்து சட்ட சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1931 - 1936 வரை காலனித்துவ அரசுக்கு எதிராகக் கடுமையான தாக்குதல்களை விக்கிரமசிங்க சட்ட சபையில் தொடுத்தார். பிரிட்டிஷ் காலனித் துவ அரசு மந்திரிசபையின் அரசியல் பொருளாதாரக் கொள் கைகள் பற்றி விமர்சித்ததோடு பொருளாதார மந்தத்தின் போது மக்கள் படும் கஷ்டங்களையும் எடுத்துரைத்தார். மருத்துவ சமூக சேவை வசதிகளின் பற்றுக் குறையைச் சுட்டிக் காட்டினுர். ஆகக்

குறைந்த சம்பள அளவை நிர்ணயித்தலை வற்புறுத்தினர். சிறுவர் சிறுமியரை வேலைக்கு வைத்திருத்தல் பற்றிய ஆணைக் குழு அறிக்கைக்கு மறுப்புரையாக ஒரு முக்கிய அறிக்கையை வெளியிட்டார். அரசவையைச் சேர்ந்தோரின் வருகைகளில் செலவிடும் வீண் செலவுகள் பற்றி எதிர்ப்புத் தெரிவித்தார். 1935-ம் ஆண்டில் அரசனின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் தொடர்பாக விசுவாசம் தெரிவிக்கும் செய்திக்கு திருத்தம் ஒன்றைப் பிரேரித்தார். 'தங்கள் 25 வருட ஆட்சியில் பொது மக்களின் வாழ்க்கை நிலையில் எள்ளளவேனும் முன்னேற்றம் இல்லை. அவர்கள் மீது கஷ்டங்களும் அநியாயமான சட்டங்களும் சுமத்தப் பட்டதோடு சுரண்டலுக்கும் ஆளாக்கப்படுகிறர்கள்..........உங்கள் ஆலோசகர்களின் புறக்கணிப்பும் அக்கறையின்மையும் வறுமை, நோய், பட்டினி என்பனவற்றிற்குக் காரணமாயுள்ளன' என்று அத்திருத்தத்தில் கூறினர்.[39] மலேரியா தொற்று நோய் பரவலின் போது நிவாரண வேலைகளின் பற்றுக்குறையை எடுத்துக் காட்டினர். மலேரியா பரவல் கற்றுத்தந்த பாடம் 'அரசியல் விடுதலை அவசியம் என்பதைத் தான்' என்றும் குறிப்பிட்டார்.[40]

1935-ன் தொழிற் சங்கச் சட்டத்தை எதிர்க்கும் இயக்கத்தை சட்ட சபைக்குள் விக்கிரமசிங்க நடத்தினர். இலங்கை அரசு தொழிற் சங்கங்களை நசுக்கும் சட்டங்களை உண்டாக்க 1929-ல் முயற்சித்தது. ஆனல் இந்த முயற்சி 1929-ல் தொழிற் கட்சி, அரசாங்கத்தில் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியாக இருந்த பாஸ் பீய்ல்டு (சிட்னி வெப்) பிரபுவால் நிராகரிக்கப்பட்டது. அதிக பிரச்சினைக்கு உரியதல்லாத தொழிற் தகராறு பற்றிய சட்டம் மட்டும் 1931-ல் நிறைவேற்றப்பட்டது. பொருளியல் மந்தத்தின் பின்விளைவுகளில் இருந்து தன்னை நாடு விடுவித்துக் கொண்டதும், தொழிற் சங்க நடவடிக்கை மீண்டும் தலையெடுக்கும் சூழ்நிலை 1935-ல் ஏற்பட்டது. சட்டசபை இந்த ஆண்டில் முதன் முதலாகத் தொழிற் சங்கங்களை ஒழுங்கு முறைக்கு உட்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வந்தது.

தொழிற் சங்கங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும், ஒவ்வொரு அங்கத்வரும் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தால் அல்லாது அவர்களிடமிருந்து சங்கத்தின் அரசியல் நிதிக்குப் பணம் அறவிடப்பட முடியாது. சங்கத்தின் உத்தியோகத்தர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் 'வெளி ஆட்களாக' அதாவது குறிப்பிட்ட தொழிலில் வேலை செய்யாதவராக இருத்தலாகாது என்பன 1935-ம் ஆண்டின் தொழிற் சங்கச்சட்டத்தின் முக்கிய விதிகளாகும். இந்தச் சட்டத்தின் மூலம்

தொழிற் சங்க இயக்கத்தை அரசாங்கம் நசுக்க முயல்வதாக வாலிப முன்னணிகள் கூறின. சட்ட சபையில், இச்சட்டத்தை விவாதித்த நிலையியல் குழுவின் உறிப்பினர் என்ற முறையில் இதை எதிர்த்து அவர் எழுதிய மறுப்புரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

'தொழிலாளர்கள் தொழிற்சங்கமாக இணைவதற்குள்ள சட்டபூர்வமான உரிமையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இம் மசோதா இயற்றப்பட்டுள்ளது. ஆனல் இதில் தொழில் கொள்வோரால் தொழிலாளர் பழிவாங்கப்படுதலுக்கு எதிரான பாதுகாப்புகள் இல்லை. ...... வேலையின்மை, நோய், முதுமை, பிரசவம், விபத்துக்கள் என்பனவற்றிற்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய இன்சூரன்ஸ் திட்டங்களை கட்டாயப்படுத்தும் சட்டங்கள் இல்லாத ஒரு நாட்டில், சுயேச்சையான சங்கங்களின் தோற்றத்தையும் அவற்றின் நடைமுறைகளையும் கட்டுப்படுத்தும் சட்டத்தைப் புகுத்துதல் மடமை''[41]

ல. ச. ச. கட்சியின் உதயம்

1935 க்கு முந்திய ஆண்டுகளில் வாலிப முன்னணிகள் பல முனைகளிலும் கிளர்ச்சிகளைச் செய்து வந்தன. வாலிப முன்னணியினரின் தேசிய விடுதலைக் கிளர்ச்சியும், சூரியமல் இயக்கமும் பிரிட்டிஷ் எதிர்ப்புணர்ச்சியை வெளிக்காட்டின. மலேரியா நோய்க் காலத்தில் செய்த நிவாரண வேலைகள் கிராம மக்களின் வறுமையையும் அங்கு நிலவிய நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறைகளையும் வெளிப்படுத்தின. மோசமான பொருளாதார மந்த காலத்தில் ஏ. ஈ. குணசிங்க தீவிர தொழிற்சங்க வாதத்தைக் கைவிட்டார். அவ்வேளை தொழிற்சங்க உரிமைகளுக்காகவும், தொழிலாளர் கோரிக்கைகளுக்காகவும் வாலிப முன்னணிகள் போராடின. எல்லா வகையான பொருளியல் அரசியல் பிரசாரங்களையும் நடத்தக்கூடிய மேடையாக சட்டசபையையும் உபயோகித்தனர்.

தனித்த அரசியல் கட்சி ஒன்றின் தேவை இவ்வேளையில் உணரப்பட்டது. வாலிப முன்னணிகளின் மிகத் தீவிர உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து 1935-ம் ஆண்டு டிசம்பர் மாதம் லங்கா சம சமாஜக் கட்சியை உருவாக்கினர்கள். புதிய கட்சி ஒரு கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டது. அன்றுட நடைமுறைப் போராட்ட நடவடிக்கைகளை உட்படுத்திய அத்தியாவசிய கோரிக்கைகள் இருபத்திரண்டைக் கொண்ட பரந்த திட்டத்தை இது முன்வைத்தது. தேசிய சுதந்திரத்தை அடைதல், பொருளாதார சமூக ஏற்றத் தாழ்வுகளை ஒழித்தல், வர்க்கம், சாதி, இனம்,

மதம், பால் அடிப்படையிலான ஒடுக்கு முறைகளை நீக்குதல், உற்பத்திச் சாதனங்களைச் சமூக உடமையாக்குதல், பங்கீட்டிலும் பரிவர்த்தனையிலும் சம உடமையைப்புகுத்துதல் என்பன தமது நோக்கங்கள் என கொள்கைப் பிரகடனத்தில் குறித்தனர். எனினும் இருபத்திரண்டு கோரிக்கைகளுள் உற்பத்திச் சாதனங்களில் இவை,இவை சமூக உடமையாக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப் படவில்லை. இதில் பொருளாதார சமூக நிலைமைகளை மாற்றுவதற் குத் தேவையான சட்டவாக்க முறைகளே விளக்கப்பட்டன. அடிப் படைச் சம்பளம், வேலையின்மைக்கு இன்சூரன்ஸ் பாதுகாப்பும் நிவாரணமும், எட்டுமணிநேரவேலை, தொழிற்சாலை நிலைமைகளை ஒழுங்குபடுத்தும் சட்டம், சேரி ஒழிப்பு, மலிவான வீட்டுவசதி, தொழிற்சங்கங்கள் கட்டாயம் பதிவுசெய்யப்பட வேண்டுமென் பதை ஒழித்தல் என்ற கோரிக்கைகளை நகரத்தொழிலாளர் சார் பாகக் கொள்கைப் பிரகடனம் தெரிவித்தது. தடையற்ற மேய்ச் சல் நிலம், வட்டியில்லாத முறையில் விதைநெல் வழங்கல், நீர்ப் பாசன வரிகளை நீக்குதல், விறகு தறிப்பதைத் தடுக்கும் வனபரி பாலன சட்டங்களை நீக்குதல் என்பன விவசாயிகள் நலன் கருதி முன்வைக்கப்பட்டவை. இளைஞர் சார்பாக இலவச பாடநூல் கள், உணவு, பால் இலவசமாக வழங்குதல், குழந்தைகளை வேலைக்கு அமர்த்தலை ஒழித்தல் என்பன கூறப்பட்டன. வரு மான வரியை உயர்த்தல், நிலவரியை உயர்த்தல், சாம்ராஜ்ய சலுகைமுறை என்ற வகையில் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட நாடு களில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களின் மீதான வரிச் சலுகையை ஒழித்தல், யப்பானிய மலிவுப்பொருள் இறக்குமதி, பங்கீட்டு முறையை நீக்குதல், ஏழைகளின் நுகர்வுப் பொருட் கள் மீதான வரிகளை நீக்கல் என்பன பொருளியல் தொடர்பான கோரிக்கைகளாகும். கீழ்க்கோடுகளிலும், பொலிஸ் அலுவலகங் கள், அரசாங்கத் திணைக்களங்கள் ஆகியவற்றிலும் சிங்களம், தமிழ் ஆகியவற்றைப் புகுத்தவேண்டும் எனவும் கொள்கைப் பிரகடனம் கோரியது.[42]

பொதுமக்களிடையே புதிய கட்சியைப் பிரபல்யப்படுத்துவதற் காக முன்வைக்கப்பட்ட குறைந்த பட்சக் கோரிக்கைகளே மேற் குறித்தவைகள். எந்தக் கோரிக்கையும் புரட்சிகர மாற்றத்தைக் குறிக்கவில்லை. ஏனெனில், கட்சிக்குள் ரொட்ஸ்கிய வாதிகளைக் கொண்ட ஒரு உட்குழு இருந்தபொழுதும் கட்சி தன்னை ஒரு மார்க்சிஸ்ட் கட்சியென ஸ்தாபிக்கவில்லை.[43] ஸ்தாபன அடிப் படையில், கட்டுப்படுத்தப்பட்ட அங்கத்துவம் கொண்ட புரட்சி கரக் கட்சியாக இது அமையவில்லை. தன்னை ஒரு சோஷலிஸ்ட்

எனக் கூறி கட்சியின் நோக்கங்களை ஏற்றுக்கொள்ளும் யாவருக் கும் அங்கத்துவம் வழங்கப்பட்டது. தேசிய முதலாளிகளால் நடத்தப்படும் தீவிர தேசிய இயக்கம் ஒன்று இலங்கையில் இல் லாததல், ஜனநாயக உரிமைகளுக்கும் அரசியல் சுதந்திரத்திற்கு மாகப் போராடக் கூடிய கட்சியொன்றின் தேவை அன்றைய நிலையில் இருந்தது. அத்தோடு, பாட்டாளி வர்க்கத்தின் உரிமை களுக்குக் குரல் கொடுக்கக்கூடிய தீவிர தொழிற் சங்க இயக்கம் அன்று இருக்கவில்லை. இதனால் நாட்டின் உழைக்கும் மக்களுக் குத் தலைமையும் வழிகாட்டலும் கொடுக்கக் கூடிய தீவிர அரசி யல் கட்சியொன்று தேவையாக இருந்தது. 1930 க்களில் போராட்டங்களை நடத்திய இளம் தீவிர தேசியவாதிகளும் சோஷ லிஸ்டுகளும் ஒன்றிணைந்து லங்கா சம சமாஜக் கட்சியை உரு வாக்கிய போது மேற்கூறிய இரு நோக்கங்களும் ஒன்றிணைந்தன.

முடிவாக, மேற்குறித்த இரு நோக்குகளும் எங்ஙனம் ஒன்றை யொன்று பாதித்தன என்பதைச் சுருக்கமாகக் குறிக்கலாம். முத லாளி வகுப்பினால் நடத்தப்படும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக் கம் ஒன்று இல்லாதபடியால் ல. ச. ச. கட்சி இந்தப் பணியை ஏற்றுக் கொள்ளவேண்டியதாயிற்று. இக்காரணத்தினால் புரட்சி கர சக்திகள் அல்லாத பகுதியினரையும் உள்ளடக்கும் விரிந்த இயக்கமாகக் கட்சியை அமைக்க வேண்டி ஏற்பட்டது. இவ்வாறு செயற்படும் போது தூய புரட்சிகரக் கட்சியாகச் செயற்படக் கூடிய தன்மை இல்லாது போயிற்று. அதே வேளை ல. ச. ச. கட்சியில் புரட்சிகரக் தத்துவம் பற்றிய அறிவு உள்ள மார்க்சிஸ் டுகள் பலர் இருந்தனர். அவர்களது நோக்கு சர்வதேச ரீதியா னது. அத்தகைய நோக்கு இனம், மொழி, மதம் போன்ற தேசிய இயக்கங்களின் உந்து சக்திகளாக விளங்கும் விடயங்களில் தூய தேசியவாத நோக்கைக் கடைப்பிடிப்பதற்குத் தடையா யிற்று.

ல. ச. ச. கட்சியின் தோற்றத்திற்குப் பின்னணியான நிகழ்ச்சி களை விளங்கிக் கொள்வதும், அக்கட்சி மேற்கொள்ள வேண்டி யிருந்த பணியின் இரட்டைத் தன்மையைப் புரிந்து கொள்வ தும் கட்சியின் பிற்கால சரித்திரத்தை விளங்கிக்கொள்ள உத வும். போர்க்காலத்தில் சட்டபூர்வமற்ற கட்சியாதல், போர்ப் பிற்கால பொது வேலை நிறுத்தங்கள், 1953 ஹர்த்தாலின் பின் னர் ஏற்பட்ட பின்னடைவு, 1964-ல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யுடன் சேர்ந்து கூட்டணி அமைக்க முடிவு செய்தமை, பின்னர் ஐக்கிய முன்னணி அரசின் அங்கம் ஆகியது ஆகிய நிகழ்ச்சி களையும் மேற்குறித்த பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளலாம்.

## உசாத்துணை நூல்கள்


Goonewardena, Leslie: *A Short Histroy* of *the Lanka Sama Samaja Party*, Colombo 1960

Jayawardena, Kumari: *The Rise of the Lobour* Movement *in Ceylon*, Duke University Press, 1972.

Lerski, George Jan: *The Origins of Trotskyism in Ceylon*· California, 1968..

Overstreet, G. and Windmiller, *M.* : *Communism in India*, California, 1960


## அடிக்குறிப்புகள்


★ இக்கட்டுரையாக்கத்தில் உதவி புரிந்து குறிப்புகளும் கூறிய ஹெக்டர் அபயவர்த்தன, நீல் குறுப்பு, என். ராம், மைக்கல் ரொபேட், டொறீன் விக்கிரமசிங்க, ஏ. ஜே. வில்சன் ஆகியோருக்கு எனது நன்றிகள்.


1. For the details on industry and trade see the *Times of Ceylon Green Book 1933;* The Review of Important Events Relating to... the British Empire, 1944-5 guoted in S. U. Kodikara, "Indians in Ceylon: Problems and Prospects," *Ceylon Studies Seminar* 68/69 Series, No 7 (University of Ceylon). Also N. Ramachandran, *Foreign Plantation Investment in Ceylon 1889-1958*, Central Bank of Ceylon, 1963.

2. For the article on Lenin in Goonesinha's Paper See *Kamkaru Handa*, 13 September 1925, "Lenin Viraya." For the report from the Dept. of State, Washington, see Dept. of National Archives, File (Conf) P (53), Vol. II, Report of 16 June 1925.

3. *The Comrade*, 19 May 1929 and C D N, 17 September, 1928.

4. For a detailed account of the years 1880-1930, see Kumari Jayawardena, *The Rise of the* Labour *Movement in Ceylon*, Duke University Press, 1972.

5. For de Mel's memorandum (28 May 1928), see Dept. of National Archives File CF 492/1928; see C D N, 8 Feb. 1929 for the quotation from the *Times* (of Britain); and for the details of the tramway strike and for the quotation in the text see the *Ceylon Independent*, January, February 1929.

6. Resolutions of the General Council (December 1927) and the Executive Committee (1931) of the Liague Against Imperialism. The resolution of the 1935 Congress of the Comintern declared that Communist parties had to "reach agreements with the organisations of the toilers of various political trends for joint action on a factory, local, district, national and international scale." *Resolutions of the 7th World Congress of the Comintern* (pamphlet) 1935.

The importance of joint trade union activity was stressed by George Dimitrov when he said-

> "We must base our tactics not on the behaviour of individual leaders of the Amsterdam unions no matter what difficulties their behaviour may cause in the class struggle, but on the qnestion of *where the masses are to be found... and make the question of struggle for trade union unity the central issue.*" George Dimitrov. *The Working Classes Against Fascism*, p 50. Emphasis added.

7. பிலிப் குணவர்த்தனா *(1900-1972) 1915-ம் ஆண்டுக் கலவரத்தின்போது மரண தண்டனை விதிக்கப்பட்டு பின் மன்னிப்பளிக்கப்பட்ட நிலச் சொந்தக் காரரான பொறலுகொட ருலகாமியின் மகனாவார். 1915-ம் ஆண்டுச் சம்பவத்தின் பின், கிறிஸ்தவ பாடசாலையான மொறட்டுவை பிரின்ஸ் ஒஃப் வேல்ஸ் கல்லூரியில் இருந்து விலகி ஆனந்தாக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அச் சமயம் ஆனந்தாக் கல்லூரியின் அதிபராக இருந்த விஸ்கொன்ஸின் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த இறைஞானியான பிறிற்ஸ் குன்ஸ் இந்திய தேசிய வாதத்தின் அனுதாபியாக இருந்தார். ஸ்கொற் நியறிங், ஜோன் கொமொன்ஸ் போன்ற பல மார்க்ஸீய வாதிகள் ஆசிரியர்களாக இருந்த விஸ்கொன்ஸின் பல்கலைக்கழகத்தில் குணவர்த்தனாவும் பின்னர் சேர்ந்தார்.*

லெஸ்லி குணவர்த்தனா (*1909- ) நில உடமையுள்ள, மேற்கத்தைய மயமான குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தை பாணந்துறையில் ஒரு டொக்டராக இருந்தார். கொழும்பு சென் தோமஸ் கல்லூரியிலும் வேல்ஸில் ஒரு தனியார் பாடசாலையிலும் கல்வி கற்ற லெஸ்லி, லண்டன் ஸ்கூல் ஒஃப் இக்கொனமிக்ஸில் பொருளாதாரத்தில்* B. sc. *பட்டம் பெற்றவர். இவர் ஒரு பரிஸ்டரும் ஆவர்,*

என். எம். பெரேரா (*1905-1979) வின் தந்தை கொழும்பில் வரி அறவிடுபவராகவும் ஒரு பிடவைக்கடை உரிமையாளராகவும் இருந்தார். ஆனந்தாக் கல்லூரியில் கற்ற என். எம். லண்டன் ஸ்கூல் ஒஃப் இக்கொனமிக்ஸில் வெய்மார் குடியரசு பற்றிய ஆய்வுக்காக* Ph. D. *பட்டமும் பின்னர் பாராளுமன்ற நடைமுறைகள் பற்றி ஆராய்ந்து* D. cs *பட்டமும் பெற்றார்.*

கொல்வின் ஆர். டி. சில்வா (1907- ) வின் தந்தை ஒரு பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரியும் (R.M.P. அப்போத்திக்கரி) நில உடமையாளரும் ஆவர். இவர் பாணந்துறை சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் பின்னர் றோயல் கல்லூரியிலும் கற்றார், இவர் லண்டன் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றார். அத்துடன் ஒரு பரிஸ்டரும் ஆவர். 1833 வரை இலங்கையில் பிரித்தானிய ஆட்சி என்பதே இவர் கலாநிதிப்பட்டத்துக்காக ஆராய்ந்த விசயமாகும். 1927-ல் இலங்கை மாணவர் சங்கச் செயலாளராக இருந்த இவர் 1931-ல் சோவியத் யூனியனுக்கும் சென்றார்.

எஸ். ஏ. விக்கிரமசிங்க (1901- ) தென்னிலங்கையில் ஒரு நில உடமைக் குடும்பத்தில் பிறந்தவர். காலி மஹிந்தா கல்லூரியில் இவர் கற்றார். இக் கல்லூரியின் அதிபராக இருத்தவர் இறைஞானியான எஃப். எஸ். வூட்வார்ட் ஆவர். உப அதிபராக இருந்த எஃட். கொர்டோன் பியர்ஸ் பிரித்தானிய சுயாதீன தொழிற்கட்சியின் அங்கத்தவராவர். 1915-ம் ஆண்டுக் கலவரத்தின் போது பாடசாலை மாணவராக இருந்த விக்கிரமசிங்க ஒரு பிரித்தானிய பொலிஸ் அதிகாரியுடன் சச்சரவு பட்டுக்கொண்டார். இலங்கையில் ஒரு டொக்டராகப் பயின்ற இவர் 1926-ல் பிரித்தானியாவுக்குச் சென்றார். லண்டனில் 1927-ல் இவர் இலங்கை மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்தார்,

8. Resolution of the General Council of tha League against Imperialism, 1927.

9. *Study of the Report on the Constitution*, Ceylon Students Association, London, 1928.

10. Philip Gunawardena, "Whither Ceylon," *The Searchlight*, 9 Nov. 1931.

11. Ibid

12. *Ceylon Independent*, 6 September 1926.

13. *The morning Leader*, 18 May and 29 Dec. 1931

14. *The Searchlight*, 13 February 1932; and *The Morning Leader*, 26 May 1931.

15. *The Morning Leader*, 24 December 1931.

16. *The Morning Leader*, 18 May 1931.

17. "Our Duty" by Terence de zylva, *The Searchlight*, 27 January 1932.

18. Quoted in *Young Ceylon*, June 1932.

19. *Young Ceylon*, September 1932, "The Need for a Palanned National Life" by Robin Rutnam.

20. *Young Ceylon*, September & October 1932.

21. *Times of Ceylon*, 10 November 1932.

22. *The* Ceylon *Independent, 11* November 1931, and *The Morning Leader, 10* November 1931.

23. டொறின் விக்கிரமசிங்க (கன்னிப் பெயர் யங்) செஷயரில் பிறந்தவர். பிரித்தானிய தொழிற்கட்சியுடன் தொடர்பு கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். *1926* முதல் *1929* வரை இவர் லண்டன் ஸ்கூல் ஒஃப் இக்கொனமிக்ஸில் கல்வி கற்ருர். அங்கு மாணவர் சங்கச் செயலாளராகவும் இருந்தார். பட்டப்படிப்பின் பின்னர் இந்தியா லீக்கில் கிருஷ்ண மேனனின் செயலாளராகப் பணியாற்றினுர். *1930*-ல் இவர் இலங்கைக்கு வந்து ஒரு பௌத்த பாடசாலையில் ஆசிரியையாக இருந்தார்.

24. Editorial in *Ceylon Independent*, 11 November 1933.

25. See *Young Ceylon*, October 1933 for Leslie Goonewardena's article; and The Searchlight, 18 October 1933 for the article by Terence de zylva.

26. Ceylon Labour Department. File T. 15, letter of 15 March 1933; and C D N, 2 May 1933 and 22 March 1933, Letter to the Editor.

27. Ceylon Labour Department, File T. 6, Police Report, 21 March 1933.

28. Ceylon Labour Department, File T. 15, Letter of 23 March 1933.

29. Ibid., Report of the Commission, 23 April 1933.

30. C D N, 25 May 1933.

31. File T. 15, op. cit., *Letter* of *14* March 1933.

32. Sessional Paper 5 of 1936, p. 25, Report of F. C. Gimson, Commissioner of Relief.

33. Ibid: The Report of the Assistant Goverment Agent, Kegalle also referred to "the most useful work of the Suriya Mal Society" in Kegalle and especially to one of its members, Robin Rutnam, who made excellent arrangements for the distribution of relief...and preformed very useful service in a locality which was particularly badly stricken,', quoted in ibid., p. 17.

34. Young Ceylon, December 1934, article on "The Epidemic,' and "Malaria and Politics" by Vernon Gunasekera, Young ceylon, June 1934

35. Ceylon independent, 23 December 1935.

36. Young Ceylon, December 1934.

37. Young Ceylon, September 1935.

38. ibid.

39. C D N, 8 May 1935.

40. Hansard, Debate of january 15, 1935, p. 34,

41. Labour Department, File T. 1., Part II.

42. Young Ceylon, February 1936.

43. The inner group of Trotskyists in the L. S. S. P. consisted of philip Gunawardena, Leslie Gunawardena, N. M. perera and Colvin R. de Silva. The split in the aprty on the question of "Trotskyism" and "Stalinism" took place In 1940 when the "Stalinist" group led by Dr. S. A. Wickremasinghe was expelled. In 1943 this group formed the Ceylon Communist Party.

---


பெண்களுக்குச் சம உரிமை கோரி தமிழில் வெளிவரும் முதலாவது முற்போக்குச் சஞ்சிகை

## பெண்குரல்

சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண்கள், உல்லாசப் பயணத் தொழிலும் பெண்களும், தோட்டத்துறைப் பெண்களும் சுரண்டலும், சீதனம், சமசம்பளம், பெண்களும் விளம்பரமும், திரைப் படத் தொழிலில் பெண்களின் நிலை ஆகியவை பற்றிய அரிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

# பெண்குரல்

தனிப்பிரதி, ரூபா. 2-50
தபால் செலவு. 50 சதம்

தொடர்பு கொள்க
16/11, டொன் கரோலிஸ் வீதி,
கொழும்பு-5.

மார்க்ஸியம் பற்றிய நூல்கள்,

பாடசாலை உபகரணங்கள், பாடநூல்கள்,

பல்கலைக் கழக மாணவர்களுக்குப்

பயன்தரும் பல்துறை நூல்கள்,

நாவல், சிறுகதை,

தமிழ் ஆங்கில சஞ்சிகைகள்

அனைத்திற்கும்

# பூபாலசிங்கம் புத்தகசாலை

4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இலங்கை,

**CABLE; 'Books'** **T, PHONE: 7631.**

கலாநிதி குமாரி ஜெயவர்த்தனு

கொழும்புப் பல்கலைக் கழகத்திலே சிரேஷ்ட பொருளியல் விரிவுரையாளரான கலாநிதி விசாக குமாரி ஜெயவர்த்தனு, இலங்கையில் தொழிலாளர் இயக்கத்தின் தோற்றம் என்ற பிரசித்திவாய்ந்த ஆங்கில நூலின் ஆசிரியர்.

இலங்கையில் தொழிலாளர் கல்வித்திட்டம் தொடங்கப்பெற்ற காலமுதல் அதற்காக உழைத்து, தொழிலாளர்களுக்கென்றே எழுதிவரும் நூல் வரிசையில் ஐந்தாவது இது. தொழிலாளர் வர்க்கத்தின் தோற்றமும் 1893-ல் நிகழ்ந்த அச்சகத் தொழிலாளர் வேலை நிறுத்தமும் என்ற முதலாவது பிரசுரம் தமிழிலும் வெளிவந்துள்ளது.

சோஷலிஸ இயக்கத் தொண்டர்களில் முன்னிற்கும் குமாரி ஜெயவர்த்தனு சகலவிதமான உரிமைப் போராட்டங்களுக்கும் உற்சாகத்துடன் ஆதரவு நல்குபவர். சமுதாயத்திலே பெண்களின் உரிமைக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் அயராது உழைத்துவரும் இவர், பெண்குரல் என்ற பெயரில் சிங்களம் - தமிழ் இரு மொழிகளிலும் வெளிவரும் இதழாசிரியர்களில் ஒருவர்.

இந்நாட்டின் தலையாய சமூக விஞ்ஞானிகளில் ஒருவரான விசாக குமாரி சமூக விஞ்ஞான சஞ்சிகை என்னும் ஆங்கில காலாண்டு இதழின் ஆசிரியர்குழுவிலும் பணியாற்றிவருகின்றார். இங்கிலாந்தில் உயர்கல்வி பெற்ற இவர், சர்வதேச மகாநாடுகள் பலவற்றில் பங்குபற்றியிருக்கிறார்.